வானவில்

VAANAVIL
ISSUE - 61 JANUARY 2016

இதழ் - 61 தை 2016

# தமிழர்கள் மத்தியில் மீண்டும் இருகட்சி அரசியல்!

**வட** மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் 'தமிழ் மக்கள் பேரவை' என்ற புதிய தமிழ் அரசியல் அமைப்பு ஒன்று உருவாக்கப்பட்டதின் பின்னர், தமிழ் மக்களுக்கு புதிய மாற்றுத் தலைமைத்துவம் ஒன்று ஏற்பட்டுள்ளதான ஒரு தோற்றப்பாடு சில அரசியல் சக்திகளாலும், ஊடகங்களாலும் உருவாக்கப்பட்டிருக்கிறது.

இந்தக் கருத்து சரியானதா என்பதை ஆராய்வதற்கு முன்னர், இப்படியான கருத்து உருவாகியிருப்பது வரலாற்றில் இதுதான் முதல் தடவை அல்ல என்பதைச் சொல்ல வேண்டும்.

தற்போது உருவாகியிருக்கும் நிலைமை, ஏறக்குறைய 1949ஆம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து சிலர் பிரிந்து தமிழரசுக்கட்சியை உருவாக்கிய கால நிலைமையை ஒத்ததாகும்.

அப்பொழுது சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் டி.எஸ்.சேனநாயக்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி வசம் இருந்தது. அவ்வரசாங்கத்தில் அப்பொழுது தமிழர்களின் ஒரே அரசியல் கட்சியாகிய ஜீ.ஜீ.பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் அங்கம் வகித்ததுடன், பொன்னம்பலம் கட்சி சார்பாக மந்திரிப் பதவியும் பெற்றிருந்தார்.

அந்த அரசாங்கம் அமைவதற்கு முதல் நடந்த பொதுத் தேர்தலில் இந்திய வம்சாவழித் தமிழ் தோட்டத்



தொழிலாளர்கள் செறிந்து வாழும் மலையகப் பகுதிகளில் ஐ.தே.கவுக்கு எதிரான வேட்பாளர்கள் அதிக அளவில் வெற்றியீட்டினார்கள். அந்த மக்கள் இழப்பதற்கு எதுவும் இல்லாத, இலங்கையின் ஆகக் கடைநிலைத் தொழிலாளர்களாக இருந்ததாலும், அவர்கள் மத்தியில் இடதுசாரிக் கட்சிகள் செல்வாக்குப் பெற்றிருந்ததாலும் தேர்தல் முடிவுகள் பெரு முதலாளிகளினதும், நிலப்பிரபுகளினதும் கட்சியான ஐ.தே.கவுக்குப் பாதகமாக அமைந்துவிட்டது.

அதன் காரணமாக டி.எஸ்.சேனநாயக்க அந்த மக்கள் மீது கடுமையான கோபம் கொண்டிருந்தார். மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையும், அதன் காரணமாக வாக்குரிமையும் இருந்த காரணத்தால்தான், அவர்கள் தனது கட்சிக்கு எதிராக வாக்களித்துவிட்டார்கள் என்று கருதிய டி.எஸ்., அந்த மக்களது பிரஜாவுரிமையையும், வாக்குரிமையையும் பறிக்கத் தீர்மானித்து, நடைமுறையிலும் செய்தார். அவரது இந்த ஒரு சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான பழிவாங்கல் நடவடிக்கையை, அதுவும் தமிழ் சகோதரர்களுக்கு எதிரான பேரினவாத நடவடிக்கையை, அரசில் இணைந்திருந்த தமிழ் காங்கிரஸ் கட்சி எதிர்த்திருக்க வேண்டும். ஆனால் அக்கட்சி அப்படிச் செய்யாததுடன், அக்கட்சித் தலைவர் பொன்னம்பலம் இந்நடவடிக்கையை ஆதரித்தும் இருந்தார்.

பொன்னம்பலத்தின் இச்செய்கை தமிழ் காங்கிரஸ் கட்சிக்குள் முரண்பாட்டைத் தோற்றுவித்தது. அதன் காரணமாக, அக்கட்சியில் இருந்த கு.வன்னியசிங்கம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், ஈ.எம்.வி.நாகநாதன் போன்றோர் தமிழ் காங்கிரசை விட்டு வெளியேறி, பொன்னம்பலத்தைத் "தமிழினத்தின் துரோகி" எனத் தூற்றிக்கொண்டு, தமிழரசுக்கட்சி என்ற பெயரில் புதிய கட்சியொன்றை அமைத்தனர். அக்கட்சி பொன்னம்பலத்தின் கட்சியை விட தீவிரமான தமிழ் தேசியவாதத்தை உயர்த்திப் பிடித்ததுடன், ஐக்கிய இலங்கைக்குள் தமிழர்களுக்கு சம அந்தஸ்து என்ற தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொள்கைக்குப் பதிலாக, தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு சமஸ்டி அமைப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியது.

ஆனால், அவர்கள் இரண்டு கட்சிகளானார்களேயொழிய, கொள்கை ஒன்றாகவே — அதாவது தமிழ் இனவாதமாகவே இருந்தது. அதன் காரணமாக, சிங்கள மக்கள் மத்தியில்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

# ஆதிக்க சக்திகளின் ஆட்சியின் கீழ் இலங்கை ஒரு வருடம்

ஐக்கிய தேசியக்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவர் மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருடன் இணைந்து, பிரதானமாக இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகள் உருவாக்கிய சதித்திட்டத்தின் கீழ் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு (08.01.2015) ஒரு வருடம் ஆகின்றது. இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் தொடர்ச்சியாக 20 வருட காலமாக ஆட்சி செய்து, முன்னெப்போதுமில்லாத வகையில் பலமாகத் திகழ்ந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சியை உடைத்து பலவீனமடையைச் செய்வதின் மூலமாகவே இலங்கையில் தமது காலை ஊன்றலாம் என்று கருதிய இந்தியாவும் அமெரிக்காவும் பிரித்தானியாவும் தமது திட்டத்தில் வெற்றி பெற்றதோடு, இலங்கையை தமது கட்டுப்பாட்டின் கீழ் நீண்ட காலமாக வைத்திருக்கும் எண்ணத்துடன் தமது இராஜதந்திரிகளை தொடர்ச்சியாக இலங்கைக்கு அனுப்பிய வண்ணமும் உள்ளனர். அத்தோடு அவ்வப்போது தற்போதைய ஆட்சியாளர்களை புகழ்ந்து அறிக்கைகளையும் விடுகின்றனர்.

இலங்கையில் ஆட்சி மாற்றம் பார்வைக்கு நீதியானதொரு (ஜனாதிபதித்)தேர்தல் மூலமாக ஏற்பட்டதாயினும், தேர்தலில் ஒரு கட்சியின் தலைவருக்கு எதிராக, அதே கட்சியின் பொதுச்செயலாளர் வேட்பாளராக நிறுத்தப்பட்டது உலகில் வேறு எந்த முதலாளித்துவ ஜனநாயக நாடுகளிலும் நிகழாத அதிசயம் என்றே கூறவேண்டும். இந்த ஆட்சி மாற்றத்திற்கு மேலே குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைத் தரப்பினர் மற்றும் குறிப்பாக மூன்று நாடுகளை விடவும், கனடா, ஐரோப்பிய ஒன்றியத்தின் சில நாடுகள், ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி), வடக்குக் கிழக்கு மையவாத தமிழ், முஸ்லீம் தேசியவாதக்கட்சிகள், புலம்பெயர் தமிழர் அமைப்புகள், பல ஆங்கில, சிங்கள, தமிழ் ஊடகங்கள் போன்றவைகளும் தமது ஆதரவை வழங்கின. அத்துடன் நிற்காமல், 100 நாள் திட்டம், சம்பள உயர்வு, நல்லாட்சி, ஜனாதிபதி ஆட்சிமுறை இல்லாதொழித்தல், ஊழல் ஒழிப்பு, தேசிய அரசாங்கம், ஊடக சுதந்திரம், போர்க்குற்ற விசாரணை, புலிகள் இயக்கத்தினர் அனைவரும் சிறையிலிருந்து விடுதலை, இனப்பிரச்சனைக்கு தீர்வு, புதிய அரசியலமைப்பு, அரசியல் நிர்ணய சபை என பல்வேறு சொல்லலங்காரங்களுடன் பவனி வரும் ஆட்சியாளர்களுக்கு, கடந்த ஒரு வருடமாக இவர்கள் ஆதரவைத் தொடர்ந்து வழங்கிய வண்ணமும் உள்ளனர்.

கடந்த ஆட்சிக்காலத்தில் ஊழல் நிகழ்ந்ததாகக்கூறி நாட்டின் சில அபிவிருத்தித்திட்டங்கள் நிறுத்தப்பட்டுள்ளன, பொருட்களின் விலைகள் உயர்ந்துள்ளன, கொழும்பில் அடிக்கடி அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றன, தனியார்மயமாக்கல், ஊழியர் சேமநல நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதி ஒழிக்கப்படவுள்ளது, இப்படி இந்த அரசின் சாதனைகளை சொல்லிக் கொண்டே போகலாம். பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சியென எதுவுமே இல்லை. ஆட்சி மாற்றத்திற்கு பரிபூரண அதரவு வழங்கி, தமிழ்மக்களை தற்போதைய ஜனாதிபதிக்கு வாக்களிக்குமாறு கூறிப் பிரச்சாரம் செய்த தமிழ் தேசியக்கூட்டமைப்புக்கு பரிசாக, எதிர்க்கட்சித்தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதாவது ஆட்சியாளர்களே எதிர்க்கட்சியாகவும் உள்ளனர்.

குடும்ப சர்வதிகார, ஊழல் நிறைந்த ஆட்சியிலிருந்து நாட்டினை விடுவித்து 'நல்லாட்சி' புரிவதாக கூறும் இந்த ஆட்சியில், அரசியல்வாதிகளிலிருந்து பாதுகாப்பு பிரிவினர் வரை பலர் ஊழல், கடத்தல், கொலை போன்ற குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்டு பிணை மறுக்கப்பட்ட நிலையில் உள்ளனர். ஆனால் அண்மையில் கடத்தல் குற்றச்சாட்டில் சம்பந்தப்பட்டதாக முழு ஆதாரங்களுடன் கைது செய்யப்பட்ட ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திரா வெறும் கண்துடைப்புக்காகவே கைது செய்யப்பட்டு, உடனடியாகவே பிணையில் விடுதலை செய்யப்பட்டுமுள்ளார்.

பாகிஸ்தானிடமிருந்து கொள்வனவு செய்யப்படவிருந்த JF17 ரக விமானங்கள் இந்தியாவின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டுள்ளது. இவ்வாறே இந்திய எதிர்ப்பினால் திரிகோணமலை துறைமுகத்தில் சீனாவின் ஒத்துழைப்புடன் நிறுவப்படவிருந்த விமான பராமரிப்பு நிலையமொன்றிற்கான ஒப்பந்தமும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. பெல்ஜியத்தை சேர்ந்த தனிநபர் ஒருவர் 1 பில்லியன் டொலர்களை இலங்கையில் வைப்பிலிட முன்வந்துள்ளதாக இலங்கையின் நிதியமைச்சர் பெருமையுடன் கூறியிருக்கிறார். முன்னைய ஆட்சியிலிருந்தவர்கள் ஊழல் செய்து சம்பாதித்த பணத்தினை வெளிநாட்டு வங்கிகளில் வைப்பிலிட்டிருப்பதாக குற்றம் சாட்டும் தற்போதைய ஆட்சியாளர்கள், வெளிநாட்டினர் ஒருவர் எமது நாட்டு வங்கியில் பெருந்தொகையான பணத்தினை வைப்பிலிட முயலும்போது, அந்தப்பணம் அவருக்கு எவ்வாறு வந்திருக்கும் என்பது பற்றி எப்படி கேள்வி எழுப்பாமல் இருக்க முடியும்.

2009 இல் உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்து நாட்டினை ஓரளவிற்கேனும் அபிவிருத்தியடையச் செய்து, முன்னேற்றப்பாதைக்கு இட்டுச்செல்ல முயன்ற ஆட்சியை முடிவுகட்டி, நாட்டினை அந்நிய சக்திகளிடம் தாரைவார்த்து அழிவுப்பாதையில் கொண்டு செல்வதைப் பார்த்தால்,

இலங்கையின் நிலைமை 'சாண் ஏற முழம் சறுக்கின' கதையாகவே உள்ளது. இந்த முழச்சறுக்கல் 1977 இலிருந்து 17 வருடங்கள் நிகழ்ந்தது. இப்போது 2015 இல் மறுபடியும் ஆரம்பித்துள்ளது. சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு முதுகில் குத்தி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதிக்கு இன்னமும் 5 வருட ஆட்சிக்காலம் உள்ளது, அடுத்த பாராளுமன்ற தேர்தலுக்கு இன்னமும் 4 வருட காலம் காத்திருக்க வேண்டும். இவ்வாறான நிலைமையில் இலங்கை மக்களுக்காக குரலெழுப்ப பலமான எதிர்க்கட்சி எதுவுமில்லாத துர்ப்பாக்கிய சூழலில் நாடு உள்ளது.

## வானவில்


**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

sunvaanavil@gmail.com


இதுவரையில் வெளிவந்த வானவில் இதழ்களை **http://manikkural.wordpress.com/** என்ற இணையத்தள முகவரியில் வாசிக்கலாம்.

**வா**னவில்லின் ஐந்தாவது ஆண்டு நிறைவு மற்றும் மலர்ந்த புத்தாண்டை ஒட்டி 'வானவில்' இதழுக்கு நேரடியாகவும், மின்னஞ்சல் மூலமாகவும், தொலைபேசி ஊடாகவும் வாழ்த்துத் தெரிவித்த வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றியைக் கூறுகின்றோம். மேலும் வாசர்களுக்கு எமது தைப்பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**– ஆசிரியர் குழு**

# 'வானவில்' வாசகர்களுக்கு ஒரு மடல்!

**'வானவில்'** 5ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்து ஆறாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ளது. இந்த மகிழ்ச்சியான தருணத்தில் 'வானவில்' தொடங்கப்பட்ட நேரத்திலிருந்து அதன் ஆதரவாளர்களாலும், எதிர்ப்பாளர்களாலும் மின்னஞ்சல் மூலமாகவும், காதில் விழக்கூடிய வாய்மொழி மூலமாகவும், பல விமர்சனங்களும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு வந்துள்ளன. அவை எல்லாம் எமது வளர்ச்சிக்கான உரமாகவும், நீராகவும் இருந்து வந்துள்ளன என்றால் மிகையாகாது.

பொதுவாக, 'வானவில்' பற்றி முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள்தான், இந்தக் குறிப்பை எழுதுவதற்கான தூண்டுகோலாய் அமைந்தன என்பதை முதலில் சொல்லிவிட வேண்டும். இனி 'வானவில்' பற்றிய விமர்சனங்களைப் பார்ப்போம்.

'வானவில்' தமிழ் தேசியத்துக்கு எதிரானது என்பது ஒரு கருத்து. இன்னொன்று, 'வானவில்' மகிந்த அரசுக்கு அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை தாங்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசுகளுக்கு ஆதரவானது என்பது. இன்னொரு சாரார் 'வானவில்' இடதுசாரிப் பத்திரிகை போலத் தன்னைக் காட்டிக் கொண்டாலும், அது 100 வீதம் ஒரு மார்க்சிச — லெனினிசப் பத்திரிகையாக இல்லை என்ற கருத்தை முன்வைக்கின்றனர். இலங்கையில் வாழும் நண்பர்கள் சிலர் 'வானவில்' இலங்கை விடயங்களை விட, சர்வதேச விவகாரங்களுக்கே அதிக முன்னுரிமை கொடுக்கின்றது என்ற குற்றச்சாட்டை முன்வைக்கின்றனர். இவை சில பொதுவான விமர்சனங்கள் அல்லது குற்றச்சாட்டுகள்.

இவ்வாறாக, 'வானவில்' பற்றி பலரும் பல்வேறு விதமான அபிப்பிராயங்களை முன்வைத்து வருகின்றனர். "காய்த்த மாமரம் கல்லெறி வாங்கத்தானே செய்யும்" என நாம் இவற்றை தட்டிக்கழித்து அசட்டை செய்துவிட முடியாது. ஆனால் விமர்சனங்களுக்கு பதில் சொல்வதற்கு முன் 'வானவில்' தொடங்கப்பட்டதின் நோக்கம் என்ன என்பதைச் சொல்லிவிடுவதும் அவசியம்.



'வானவில்' எந்தவொரு அரசியல் கட்சி சார்பாகவோ அல்லது அல்லது அப்படியான அமைப்பொன்றை உருவாக்கும் நோக்குடனோ அல்லது ஒரு குறிப்பிட்ட சித்தாந்தத்தை பிரச்சாரம் செய்யும் நோக்குடனோ தொடங்கப்பட்டது அல்ல. இதை வழிநடாத்தும் குழுவில் மார்க்சியவாதிகள், ஜனநாயகவாதிகள், முற்போக்கு தேசியவாதிகள், ஏகாதிபத்திய எதிர்ப்பாளர்கள், யதார்த்தவாதிகள், காரியார்த்தவாதிகள் எனப் பலதரப்பட்டவர்களும் இருக்கிறார்கள்.

இவர்கள் எல்லோருக்கும் பொதுவான ஒரு தேவை இருந்தது. அதாவது, இலங்கையில் 1977இல் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்த பின்னர், படிப்படியாக ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு வந்து, அந்த அரசின் இன ஒடுக்குமுறை கொள்கையால் தமிழ் தேசியவாதிகள் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த பின்னர், மக்களின் சகலவிதமான உரிமைகளும் போரில் ஈடுபட்ட இருதரப்புகளான அரசாலும், தமிழீழ விடுதலைப் புலிகளாலும் முற்றாகவே மறுக்கப்பட்டன. குறிப்பாக, பாசிசப் போக்குக் கொண்ட புலிகளால் தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரம் முற்றுமுழுதாக நசுக்கப்பட்டது.

சுமார் 30 வருடங்கள் இந்த அசாதரண சூழல் நீடித்தது. 2009இல் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட பின்னரும், தமிழ் சூழலில் தமிழ் தேசியவாதம் கருத்துச் சுதந்திரத்தை அனுமதிக்கவில்லை. பயமுறுத்தலாலும், நீண்டகால தமிழ் தேசியவாத மூளைச் சலவையாலும், பாரம்பரிய தமிழ் தேசியவாதிகள் மட்டுமின்றி, மாற்றுக்கருத்துப் பேசியோர், ஏன் மார்க்சியம் பேசியோர் கூட, தமிழ் தேசியவாதம் என்ற அபினி மயக்கத்தில் வீழ்ந்து கிடந்தனர். அவர்கள் எந்த மாற்றுக் கருத்தையும் தமிழ் தேசியத்துக்கு எதிரானதாகவும், துரோகத்தனமானதாகவும் உடனடியாக முத்திரை குத்தினர்.

இந்தச் சூழலில்தான், ஒப்பீட்டு வகையில் முதலாளித்துவ ஜனநாயகம் நிலவும் மேற்கு நாடொன்றில் இருந்து, நம்மில் சிலர் இணைந்து உலகளாவிய தமிழ் மக்களுக்காக உண்மையான ஒரு மாற்று ஊடகமான 'வானவில்'லை ஆரம்பித்தோம். இந்த சிறு விளக்கத்திலிருந்து 'வானவில்' தொடங்கப்பட்டதின் நோக்கத்தை நமது வாசகர்கள் ஓரளவு புரிந்து கொள்வார்கள் என நம்புகிறோம்.

இன்னும் தெளிவாகச் சொல்வதானால், 'வானவில்'லின் நோக்கம், தேசிய — சர்வதேசிய நிலவரங்களை முற்போக்கான கண்ணோட்டத்தில் வாசகர்களுக்குக் தருவதுதான். அதன்படி பார்த்தால், இன்றைய உலகின் பிரதான பிரச்சினைகளான வறுமை, வேலையின்மை, சுகாதாரச் சீர்கேடுகள், யுத்தம், இயற்கை அழிவுகள், இனவாதம், நிறவாதம், மதவாதம் என்பன முதலாளித்துவத்தாலும், அதன் உச்சகட்டமான ஏகாதிபத்தியத்தாலும் ஏற்படுத்தப்பட்டவை என்பது புலனாகும். எனவே ஏகாதிபத்தியத்தை எதிர்த்து அதன் நுகத்தடியிலிருந்து விடுதலை பெறப் போராடும் சகல மக்களுடனும், தேசங்களுடனும், நாடுகளுடனும் 'வானவில்' கரம் கோர்த்து நிற்பது எமது கொள்கையாகும்.

உள்நாட்டைப் பொறுத்தவரை, இந்த ஏகாதிபத்திய சக்திகளின் அடிவருடிகளான தமிழ் – சிங்கள பிற்போக்கு சக்திகளுக்கு எதிரான நிலைப்பாடே 'வானவில்'லின் நிலைப்பாடாகும். அப்படிப் பார்க்கையில், இலங்கை சுதந்திரமடைந்த 1948ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசியக் கட்சி மக்களின் விரோதிகளான இலங்கையின் பெருமுதலாளிகளினதும், நிலப்பிரபுத்துவ சக்திகளினதும் நலன்களைப் பாதுகாப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்ததுடன், பேரினவாதக் கொள்கைகளையும் நடைமுறைப்படுத்தி, ஏகாதிபத்திய நலன்களுக்கும் சாதகமாகச் செயற்பட்டு வந்துள்ளது. எனவே, உள்நாட்டில் மக்களின் பிரதான விரோதி ஐ.தே.க. என்பதுவே 'வானவில்'லின் கருத்தாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்களது முதலாவது அரசியல் கட்சியான தமிழ் காங்கிரஸ் முதல், பின்னர் காலத்துக்குக் காலம் தமிழ் மக்களுக்குத் தலைமை தாங்கிய தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு வரை, எல்லாக் கட்சிகளுமே தமிழ் பிற்போக்கு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ, சாதி வெறி மற்றும் தமிழ் இனவாத சக்திகளின் பிரதிநிதிகளாகச் செயற்பட்டு வந்ததுடன், ஐ.தே.கவுடன் கள்ளக்கூட்டு வைத்துக்கொண்டு, ஏகாதிபத்தியத்துக்குச் சார்பாகவும் செயற்பட்டு வந்துள்ளன. எனவே பிற்போக்குத் தமிழ் தலைமை என்பது, தமிழ் மக்களினது சொந்த விரோதி என்பது 'வானவில்'லின் நிலைப்பாடாகும்.

இந்த இரு தரப்பையும் நாம் எதிர்க்கையில், நாம் ஆதரிக்கக்கூடிய சக்திகள் எவை என்ற கேள்வி எழுவது இயல்பானதே. அப்படிப் பார்க்கையில், சில வரலாற்றுத் தவறுகளை விட்டிருந்தாலும், ஏகாதிபத்தியத்தை உறுதியுடன் எதிர்த்து, நாட்டின் தேசிய சுதந்திரத்தையும் இறைமையையும் பாதுகாப்பதிலும், இலங்கை மக்களுடைய ஏற்றத்தாழ்வான, சீரழிந்து போன சமூக அமைப்பை மாற்றி, ஒரு சமதர்ம சமுதாயத்தை நிறுவுவதற்காகவும், சகலவிதமான இனவாதங்களுக்கு எதிராகவும் போராடும் முன்னணிச் சக்தியாகவும் இடதுசாரிக் கட்சிகளே திகழ்ந்து வந்திருக்கின்றன.

அந்தக் கட்சிகளுடைய கொள்கை அளவுக்கு தீவிரமான சோசலிசக் கொள்கைகளைக் கொண்டிருக்காவிட்டாலும், இலங்கை முதலாளி வர்க்கத்தின் தேசபக்தியுடைய தேசிய முதலாளித்துவத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அதன் ஸ்தாபித காலத்திலிருந்து ஏகாதிபத்தியத்தையும் அதன் அடிவருடியான ஐ.தே.கவை எதிர்ப்பதிலும் குறிப்பிடத்தக்க சாதனைகளை நிலைநாட்டியுள்ளது. சுருக்கமாகச் சொல்லப்போனால், நவீன இலங்கையின் உருவாக்கத்தில் இடதுசாரிக் கட்சிகளினதும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியினதும் பங்களிப்பு இல்லாமல் அது சாத்தியமாகி இருக்காது.

**எனவே, தற்போதைய சூழலில் வேறு மாற்றுத் தெரிவுகள் இல்லாத ஒரு நிலையில், இந்த அணியினரையே 'வானவில்' ஆதரிக்கின்றது என்று பகிரங்கமாகப் பிரகடனம் செய்வதில் 'வானவில்'லுக்கு எந்தத் தயக்கமும் கிடையாது. கடந்த காலத்தில் மட்டும் இன்றி, எதிர்காலத்திலும், ஏகாதிபத்திய எதிர்ப்பு, பூரணமான தேசிய விடுதலை, சோசலிசம் என்பனவே 'வானவில்'லை வழிநடாத்தும் கொள்கைகளாக இருக்கும் என்பதை ஓங்கி உரத்து உலகத்துக்குப் பெருமையுடன் சொல்லிக் கொள்கின்றோம்.**

அதேநேரத்தில், மக்களுக்கு விரோதமில்லாத மாற்றுக் கருத்துகளுக்கு கடந்த காலத்தில் இடம் கொடுத்தது போலவே, வருங்காலத்திலும் 'வானவில்' களம் அமைத்துக் கொடுக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

**-'வானவில்' ஆசிரிய குழு**

# யாழ்.நூலகத்துக்கு தென்னிலங்கை மக்களின் புத்தகங்கள் அன்பளிப்பு!

யாழ்ப்பாணம் பொது நூலகத்திற்கு நாட்டின் தென் பகுதியைச் சேர்ந்த கலைஞர்கள், எழுத்தாளர்கள், பொதுமக்கள் சிலர் இணைந்து 10,000 புத்தகங்களை அன்பளிப்பு செய்திருக்கின்றார்கள்.

1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி நள்ளிரவு கடந்த நேரத்தில் அன்றைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்க அமைச்சர்கள் தலைமையிலான குண்டர்களால் யாழ்ப்பாண பொது நூலகம் எரியூட்டப்பட்டது.

இதன்போது அங்கிருந்த சுமார் ஒரு இலட்சம் புத்தகங்கள் எரிந்து சாம்பலாகிப் போயின. பின்னர் இந்த நூலகம் சந்திரிக தலைமையிலான ஆட்சிக்காலத்தில் படிப்படியாக புனரமைக்கப்பட்டு, பின்னர் புதிய கட்டடம் அமைக்கப்பட்டது. அவரது ஆட்சிக்காலத்தில் இந்த நூலகத்தைப் புனரமைப்பதற்காக தென்னிலங்கைச் சிங்கள மக்களிடம் வீட்டுக்கு ஒரு புத்தகமும், செங்கல்லும் சேகரிக்கப்பட்டு, ஐ.தே.க. அரசு செய்த பாவச் செயலுக்கு பிராயச்சித்தம் செய்யப்பட்டது.

பழைய இடத்தில் புதிய நவீன புதிய நூலகக்கட்டிடம் அமைக்கப்படுவதற்கு முன்னரே, யாழ். செயலக வளவில் தற்காலிக நூலகம் இயங்கி வந்த காலத்திலேயே, தென்னிலங்கை மக்களிடம் இருந்து புத்தக அன்பளிப்புகள் வரத் தொடங்கிவிட்டன. அவைகளில்



கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் தோழர் பீட்டர் கெனமன் தனது வாழ்நாள் முழுவதும் சேகரித்து வைத்திருந்த

தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க...

# மருத்துவக் கல்வியைத் தனியார்மயப்படுத்த சுகாதார அமைச்சர் ராஜித முயற்சியா?

சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவின் மருமகள் சறுப சாமங்கி மனதுங்க (ராஜிதவின் மகனும், நாடாளுமன்ற உறுப்பினருமான சதுர சேனரத்தினவின் துணைவியார்), தனியார் கல்வி நிறுவனமான தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவனத்தில் (SAITM) ஒரு கற்கை நெறியைப் பயில்வதால்தான், ராஜித அந்த நிறுவனத்தைப் பாதுகாக்க முனைவதாக, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் (IUSF) குற்றச்சாட்டொன்றை முன் வைத்திருக்கிறது.

மாணவர் சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பாளர் லகிறு வீரசேகர கூறுகையில், அந்தக் கல்வி நிறுவனத்தின் நம்பிக்கையான நபர்கள் சிலர் தந்த தகவலின்படி, ராஜிதவின் மருமகள் அங்கு கல்வி கற்பதாகவும், அவரது பதிவு இலக்கம் MF121F006MD77 என்றும் குறிப்பிட்டார். அதுமாத்திரமின்றி, வேறு சில அரசியல்வாதிகளின் உறவினர்களும், நண்பர்களும் கூட அங்கு கல்வி கற்பதாகவும், ஆனால் அதுபற்றிய பூரணமான தகவல்கள் இன்னமும் தமக்குக் கிடைக்கவில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

மேலும் அவர் கூறுகையில், “மேற்படி மருத்துவக் கல்லூரியின் மருத்துவத் தகுதிச் சான்றிதழ்கள் சுகாதார அமைச்சின் ஆதரவுடன் பல மில்லியன் ரூபாக்களுக்கு விற்கப்படுகின்றன. இலங்கை மருத்துவ சபை (Srilanka Medical Council) மேற்படி தனியார் மருத்துவக் கல்லூரியை அங்கீகரிக்க மறுத்த போதிலும், சுகாதார அமைச்சர் டொக்டர் ராஜித சேனரத்ன அதை அங்கீகரித்துள்ளதுடன், அங்கு பயிலும் மாணவர்களை அரசாங்க வைத்தியசாலைகளில் களப் பயிற்சி பெறவும் அனுமதித்துள்ளார். அமைச்சர் பொது மருத்துவ சேவையைத் துஸ்பிரயோகம் செய்வதையும், அப்பாவி நோயாளிகளின் உயிர்கள் ஆபத்துக்கு உள்ளாவதையும், நாங்கள் இனியும் வாய்மூடி மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது” எனக் குறிப்பிட்டார்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனத்தின் இணைப்பாளர் மேலும் தெரிவிக்கையில், சுகாதார அமைச்சின் இந்தத் தீர்மானத்துக்கு எதிராக தொழிற்சங்கங்களையும், சமூக அமைப்புகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு, அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் கூட்டு எதிர்ப்புப் போராட்ட இயக்கமொன்றை முன்னெடுக்கத் தீர்மானித்திருப்பதாகவும் கூறினார்.

## சி.சுரேந்திரநாத்

இலங்கையில் அரச சட்டசபையின் (State Council) முதலாவது கல்வி அமைச்சராகவும், இலங்கை தேசிய காங்கிரசின் தலைவராகவும் இருந்த, சி.டபிள்யு.டபிள்யு. கன்னங்கரதான் 1945இல் இலவசக் கல்வியை அறிமுகம் செய்து வைத்தார். பின்னர் 1956இல் பிரதமர் பதவிக்கு வந்த எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்கதான் சுயமொழிக் கல்வியை அறிமுகம் செய்து வைத்தார். அதன்பின்னர், அவரது துணைவியார் சிறிமாவோ பண்டாரநாயக்க 1960இல் பிரதமர் பதவிக்கு வந்த பின்னர்தான் பாடசாலைகளைத் தேசியமயமாக்கி பொதுக் கல்விக்கு வித்திட்டார். இவைகள் மூலம்தான், இலங்கையின் சாதாரண வறிய மற்றும் கிராமப்புற மக்களின் பிள்ளைகள் உயர்கல்வியை மேற்கொண்டு,



அரசாங்க உயர் பதவிகளுக்கு வர முடிந்தது.

ஆனாலும், காலத்துக்குக் காலம், உலக வங்கி போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் ஆலோசனைக்கு இணங்கவும், பண முதலைகளின் ஆசைகளுக்கு ஏற்பவும், கல்வியைத் தனியார்மயப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. குறிப்பாக, பெரும் பண வருவாயை ஈட்டக்கூடியதும், சமூக அந்தஸ்தைத் தேடிக் கொடுக்கக் கூடியதுமான மருத்துவக் கல்வியை தனியாருக்குத் தாரை வார்க்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்கள் முயன்று வந்துள்ளன.

கடந்த மகிந்த ராஜபக்ச அரசாங்க காலத்திலும் அதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன. இன்றைய அரசாங்கத்தில் (எல்லா சூழ்நிலைகளிலும்) அமைச்சராக இருக்கும் எஸ்.பி.திஸாநாயக்க, கடந்த அரசாங்கத்தில் கல்வி அமைச்சராக இருந்தபோது, தனியார் மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி அளிக்க முயன்றதாகவும், அது ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் கவனத்துக் கொண்டு போகப்பட்டதால், தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் கூறப்பட்டது. இப்பொழுது அந்த

**தொடர்ச்சி 6ம் பக்கம் பார்க்க...**

# சீ.வி.கேயின் காலம் கடந்த ஞானமும், அவர் உரை எழுப்பும் கேள்விகளும்!

**'வானவில்'** 2015 மார்கழி இதழின் முன்பக்கத் தலைப்புக் கட்டுரையில், இலங்கையில் வரையப்படவுள்ள புதிய அரசியல் யாப்பில் 2000ஆம் ஆண்டில் அப்போதைய சந்திரிக குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் முன்வைத்த இனப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டம் உள்ளடக்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.


அந்தக் கட்டுரை வெளிவந்த பின்னர், அந்தத் தீர்வுத் திட்டம் சம்பந்தமான கருத்தை வட மாகாணசபையின் அவைத் தலைவரும், நீண்டகால தமிழரசுக் கட்சி உறுப்பினருமான சீ.வி.கே.சிவஞானம் அண்மையில் நடந்த தமிழரசுக் கட்சிக் கூட்டம் ஒன்றில் பகிரங்கமாக முன்வைத்திருக்கிறார்.

அந்தக் கூட்டத்தில் அவர் கூறுகையில், "'பிராந்தியங்களின் ஒன்றியம்' என்பது சந்திரிகாவின் முன்மொழிவுகளில் உள்ளடக்கப்பட்ட விடயம். இது ஆங்கிலத்தில் Union of Regions என்று சொல்லப்படுகிறது. Unitary State என்று சொல்லப்படுகின்ற ஒற்றையாட்சி முறையிலிருந்து மாறுபட்டது. இதை ஏற்றுக் கொள்ளாத முறையை கொண்டு வருவதற்குத்தான் Union of Regions என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றது. Regions என்பது எங்களைப் பொறுத்த வரையில் வடக்கு, கிழக்கு இணைந்த தாயகம்தான். அது பிழையான விடயமல்ல. இதுவும் ஒரு வகையான சமஸ்டி அமைப்புத்தான். அதுதான் எங்களுடைய முடிவான முடிவாக நாங்கள் கருதவில்லை" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிவஞானத்தின் உரை சில முக்கியமான கேள்விகளை எழுப்புகின்றது.

முதலாவது கேள்வி, சந்திரிக அரசு முன்வைத்த தீர்வுத் திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கின்றது என அவர் கூறியிருப்பதால், உண்மையில் அரசாங்கம் அவ்வாறான ஒரு முடிவுக்கு ஏற்கெனவே வந்துவிட்டதா?

இரண்டாவது கேள்வி, 2000ஆம்



ஆண்டில் இந்தத் தீர்வுத் திட்டம் (சிவஞானத்தின் வார்த்தையில் சமஸ்டிக்கு ஒப்பானது) நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட போது, சிங்களப் பேரினவாதக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியுடனும், ஜே.வி.பியுடனும், ஹெல உறுமயவுடனும் சேர்ந்து, இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு தலைவர்கள் அன்று அங்கம் வகித்த தமிழர் விடுதலைக் கூட்டணியும் அந்தத் தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற விடாமல் முறியடித்தது. அப்படியானால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தனது வரலாற்றுத் தவறை உணர்ந்து இப்பொழுது அதை ஏற்றுக்கொண்டு விட்டதா?

மூன்றாவது கேள்வி, சமஸ்டிக்கு ஒப்பான இந்தத் தீர்வுத் திட்டம் தமது முடிவான முடிவல்ல என்றும் சிவஞானம் சொல்லி இருப்பதால், அதற்கு அப்பால் உள்ள தனித்தமிழ் ஈழம் என்ற தனிநாடுதான் இன்னமும் அவர்களது இலட்சியமா? அவ்வாறாயின், தற்போதைய மைத்திரி – ரணில் அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னர், "ஒன்றுபட்ட இலங்கைக்குள் தமிழ் மக்கள் பிரச்சினைக்கு நியாயமான தீர்வையே வலியுறுத்துகிறோம்" என்று அண்மைக்காலமாக தமிழரசுக்கட்சித் தலைவர்களான இரா.சம்பந்தனும், மாவை சேனாதிராசாவும் திரும்பத் திரும்பக் கூறி வருவது பொய்க் கதைகளா? இதே கூட்டத்தில் புலிகளின் தலைவர் பிரபாகரன்தான் தமிழர்களின் ஒரே தேசியத் தலைவர் என்பதுதான் தமிழரசுக்கட்சியின் ஒரே முடிவு என்றும் சிவஞானம் வலியுறுத்தி இருப்பதால், தனிநாட்டு கொள்கையைத்தான் தமிழரசுக்கட்சியும் பின்பற்றுகிறது என்று அர்த்தமாகிறது.

எனவே, இனப் பிரச்சினையில் தமது உண்மையான கொள்கை என்ன என்பதை, அதாவது ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரப் பகிர்வா அல்லது தனித்தமிழ் நாடா என்பதைத் தமிழரசுக்கட்சித் தலைமை தெளிவுபடுத்துவது அவசியம்.

**– புனிதன்**

5ம் பக்கத்தொடர்ச்சி...

முயற்சி சுகாதார அமைச்சர் ராஜித சேனரத்னவினால் முன்னெடுக்கப்படுவதாகக் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது

மருத்துவக் கல்வியில் தனியாரின் சுரண்டலுக்காக வக்காலத்து வாங்குபவர்கள், தமது நிலையை நியாயப்படுத்துவதற்காக சில விபரீதமான வாதங்களை முன் வைக்கின்றனர். அதாவது, இலங்கையில் 30,000 தகுதி பெற்ற மருத்துவர்களுக்குத் தேவை இருப்பதாகவும், ஆனால் அவ்வாறான மருத்துவர்கள் 17,000 பேர் மட்டுமே இருப்பதாகவும், வருடம் 1,000மருத்துவர்களை மட்டுமே பயற்றுவிக்கும் அரசாங்க பல்கலைக்கழகங்களால் இத்தொகையைப் பூர்த்தி செய்ய முடியாது என்றும், எனவே அந்தப் பற்றாக்குறையை ஈடு செய்வதற்காக தனியார் மருத்துவக் கல்லூரிகளை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிக்கின்றனர்.

மருத்துவர்களுக்கு பற்றாக்குறை இருப்பின், அதை அரசாங்க மருத்துவப் பல்கலைக்கழகங்களை அதிகரிப்பதன் மூலம் நிவர்த்தி செய்வதற்கு வழிவகை இருக்க, தனியார் கல்லூரிகளை ஊக்குவிப்பது இலவசக் கல்வியை இல்லாமல் செய்வதின் முதல்படியாகும். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களின் தனியார்மய, தாராளமய கொள்கைகளுக்கு அமைய எடுக்கப்படும் இந்த நாசகார முயற்சியை, மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எல்லோருமாக இணைந்து முறியடிக்க வேண்டும். இல்லாவிடின், இலங்கை சிறார்களின் எதிர்காலக் கல்வி முற்றிலும் இருள் சூழ்ந்ததாக மாறிவிடுவது திண்ணம். *

# 'றோ' பற்றிய ஜே.வி.பியின் இரட்டை நிலைப்பாடு!

**சீ**னாவில் நடைபெற்ற ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டில் பங்குபற்றிவிட்டு வந்த கையோடு இந்தியாவின் 'றோ' (RAW – Research and Analysis Wing) உளவு அமைப்பு மீது குற்றச்சாட்டொன்றைத் தூக்கி வீசியிருக்கிறார் ஜே.வி.பியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திசாநாயக்க.

அதாவது, யாழ்ப்பாணத்தில் றோ பல துறைகளிலும் ஊடுருவி, அங்கு அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்கி வருவதாக அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். திசாநாயக்க என்ன ஆதாரங்களை வைத்துக்கொண்டு இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் என்ற விபரங்கள் வெளிவராத போதிலும், இந்திய அரசாங்கம் போர் முடிவுற்ற பின்னர் யாழ்ப்பாணத்தில் தனது துணைத் தூதரகம் ஒன்றைத் திறந்து செயல்படுவதும், இந்திய அமைதிப்படை இலங்கையில் இருந்த காலத்தில் அதனுடனும், றோவுடனும் இணைந்து வேலை செய்த சிலரின் நடமாட்டம் யாழ்ப்பாணத்தில் காணப்படுவதும்தான் அவரது குற்றச்சாட்டுக்கு அடிப்படை என ஜே.வி.பி. வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

திசாநாயக்க றோ பற்றிய தனது குற்றச்சாட்டை முன்வைத்த சந்தர்ப்பத்தில், இன்னொரு விடயத்தையும் அவர் கூறியிருக்கிறார். அதாவது, இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவையோ, ஐ.நாவையோ நம்பியிருப்பதில் பிரயோசனம் இல்லை என்றும் கூறியிருக்கிறார். ஜே.வி.பி. தலைவரின் இந்தக் கூற்று ஓரளவு சரியானது என்ற போதிலும், கடந்த காலத்தில் இலங்கையில் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக முயற்சிகள் எடுக்கப்பட்ட போதேல்லாம் ஜே.வி.பி., ஐ.தே.க, ஹெல உறுமய போன்ற சிங்களப் பேரினவாத சக்திகளுடன் இணைந்து அவற்றைக் குழப்பியது பற்றி என்ன சொல்லப் போகிறார்? அதுவுமல்லாமல், இனப்பிரச்சினைத் தீர்வுக்கு தமது திட்டம்



என்ன என்பதை ஏன் இன்றுவரை ஜே.வி.பி. வெளியிடாமல் இருக்கின்றது?

றோ அமைப்பைப் பற்றி ஜே.வி.பி. தலைவர் கூறியிருப்பது ஒன்றும் ஆச்சரியகரமான விடயம் அல்ல. இந்தியா 1947இல் பிரித்தானிய காலனித்துவவாதிகளிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர், இந்தியாவை ஆட்சி புரிந்த பெருமுதலாளி வர்க்கம் நடைமுறைப்படுத்திய தேச விஸ்தரிப்புவாதக் கொள்கைக்கு சேவகம் செய்யவே றோ உளவு அமைப்பு உருவாக்கப்பட்டது. அதற்கு எண்ணற்ற உதாரணங்கள் வரலாறு முழுவதும் உள்ளன.

இலங்கையிலும் றோ மிக நீண்டகாலமாக செயற்பட்டு வருகிறது. 1977இல் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐ.தே.க. ஆட்சி இனப்பிரச்சினையை இராணுவ ரீதியாகக் கையாள முற்பட்டவுடன், றோவும் தனது கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தது. இலங்கை அரசை எதிர்த்துப் போராடப் புறப்பட்ட தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கு இந்தியாவில் ஆயுதப் பயிற்சி வழங்கியதில் றோவுக்கும் முக்கியமான பங்கு இருந்ததென்பது இரகசியமான விடயமல்ல.

1971இல் கிழக்குப் பாகிஸ்தானை பாகிஸ்தானில் இருந்து பிரித்து, பங்களாதேஸ் என்ற தனிநாட்டை உருவாக்கியதில் றோ முக்கிய பங்கு வகித்தது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அந்த நேரத்தில் பங்களாதேசின் உதயம் தமிழ் ஈழத் தனிநாட்டை உருவாக்குவதற்கான போராட்டத்தில் ஆரம்பக் கட்டத்தில் இருந்த தமிழ் தேசியவாதிகளுக்கும் கூட பெரும் உற்சாகத்தைக் கொடுத்தது. அதனால்தான், தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தை அதுவரை காலமும் "ஈழத்துக் காந்தி" என்று வர்ணித்து வந்த தமிழரசுக் கட்சியினர், பங்களாதேஸ் உதயத்தின் பின்னர் யாழ்.முற்றவெளி மைதானத்தில் பொதுக்கூட்டம் ஒன்றை நடாத்தி, செல்வநாயகத்தை "ஈழத்து முஜிபுர் ரஹ்மான்" (பங்களாதேசின் விடுதலையை வென்றெடுத்த அந்நாட்டின் தேசபிதா) எனக் குறிப்பிட்டு அவருக்கு மலர்க்கிரீடம் சூட்டி மகிழ்ந்தனர்.

அதுமட்டுமின்றி, இந்தியாவின் உதவியுடன் தாமும் இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழருக்கென தனிநாடு ஒன்றை உருவாக்கப் போவதாக தமிழரசுக்கட்சித் தலைவர்கள் பகிரங்கமாகவே பேசியும் வந்தனர். பின்னர் அதுபோலவே தமிழீழத்துக்கான ஆயுதப் போராட்டம் நிகழ ஆரம்பித்ததும், றோவும் தனது மூக்கை அதில் நுழைத்துக் கொண்டது.

இவைகள் எல்லாம் வரலாற்றின் பழைய பக்கங்களாகி விட்டன. ஆனால் மிக அண்மையில், இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் 2015 ஜனவரி 8இல் நிகழ்ந்தபோது றோ என்ன செய்தது?

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் வேலை பார்த்த ஒரு றோ அதிகாரி, அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு எதிராக, எதிரணியின் வேட்பாளரான மைத்திரிபால சிறிசேனவுக்காக வேலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டார். அதுமாத்திரமல்ல, தனது தேர்தல் தோல்விக்கு மேற்கத்தைய சக்திகளை குற்றஞ்சாட்டிய மகிந்த ராஜபக்ச, றோ அமைப்பையும் அதனுடன் சேர்த்துப் பகிரங்கமாகவே குற்றஞ்சாட்டினார்.

இதில் ஒரு முக்கியமான விடயம் என்னவெனில், இப்பொழுது யாழ்ப்பாணத்தில் றோவின் நடவடிக்கைகளைக் குற்றஞ்சாட்டும் தலைவர் அனுரகுமார திசாநாயக்கவின் ஜே.வி.பியினர் றோவால் ஆதரிக்கப்பட்ட மைத்திரிபால சிறிசேனவைத்தானே தாமும் ஆதரித்தார்கள். மேற்கத்தைய ஏகாதிபத்தியத்தையும், இந்திய றோவையும்

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

# நத்தார் சாதனை!

அவுஸ்திரேலியாவில் 2015 நத்தார் கொண்டாட்டத்துக்காக உருவாக்கப்பட்ட ஒரு செயற்கை நத்தார் மரத்தில் 518,838 (ஐந்து இலட்சத்து, பதினெட்டாயிரத்து, எண்ணூற்று முப்பத்தெட்டு) மின் குமிழ்கள் பொருத்தப்பட்டுள்ளன! இந்தச் சாதனை 'கின்னஸ்' புத்தகத்தில் இடம்பெறவுள்ளது.

# சீனாவில் ஏற்படப்போகும் சுவாசப் புற்றுநோய் மரணங்கள்!

சீனாவில் சுவாசப்பை புற்றுநோய் காரணமாக 2020இல் 700,000 (ஏழு இலட்சம்) பேர் மரணத்தைத் தழுவுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. காற்று மாசடைந்துள்ளதனாலும், அதிகரித்து வரும் புகைப் பிடிக்கும் பழக்கம் காரணமாகவும், இந்த மரணங்கள் நிகழவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தலில் குதித்த சவூதிப் பெண்கள்!

சவூதி அரேபியாவில் 2015 டிசம்பர் 12இல் நடைபெற்ற மாநகரசபைத் தேர்தல்களில் 900 பெண்கள் போட்டியிட்டு இருக்கிறார்கள். 2011இல் அப்போதைய மன்னர் அப்துல்லா பெண்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்களிக்கவும், போட்டியிடவுமான உரிமையை வழங்கினார். அதன் பலனாகவே தற்போதைய தேர்தலில் இவ்வளவு தொகையான பெண்கள் போட்டியிடக்கூடிய சூழல் ஏற்பட்டது. அவர்கள் போட்டியிட்ட தொகையைப் பார்க்கும் போது, சவூதியில் பெண்களின் அடிப்படையான உரிமைகளில் ஒன்று மிக நீண்ட காலமாக ஆணாதிக்க சமுதாயத்தினால் பலவந்தமாகப் பறித்து வைக்கப்பட்டிருந்த உண்மை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.




# சீனாவின் நாணயம் உலக அந்தஸ்துப் பெற்றது!

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) உயர்தர (Elite Group) நாணய சேமிப்பு வரிசையில் உலகின் இரண்டாவது பெரிய பொருளாதார சக்தியான சீனாவின் 'றென்மின்பி' (Renminbi) நாணயத்தையும் சேர்த்துக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. 2016 ஒக்ரோபரில் இருந்து இது நடைமுறைக்கு வரும். இதுவரை காலமும் அமெரிக்க டொலர், பிரித்தானிய பவுண்ட், யப்பானிய யென் ஆகிய நாணயங்களே அந்தத் தகுதியில் இருந்தன.

# படைகளில் அமெரிக்கப் பெண்கள்

அமெரிக்கப் படைகளில் மற்றைய நாடுகளைவிட பெண்களும் கூடுதலான பங்கை வகிக்கின்றனர். சமீபத்தில் வெளியான புள்ளிவிபரங்களின்படி, அமெரிக்கப் பெண்கள் விமானப்படையில் 19 சதவீதமும், கடற்படையில் 18 சதவீதமும், இராணுவத்தில் 14 சதவீதமும், கடற்படை சம்பந்தமான துறைகளில் (Marine Corps) 8 சதவீதமும் பங்கு வகிக்கின்றனர் எனத் தெரிய வந்துள்ளது.

**தகவல்களை சீராக ஒழுங்கமைத்தபடி கொண்ட, பெரும்பாலும் எல்லா விடயங்களைப் பற்றிய தகவல்களையும் உள்ளடக்கிய நூல் கலைக்களஞ்சியம் (Encyclopedia) என அழைக்கப்படும்.**

# உயர்ந்த கோபுரங்கள்...

இன்றைய உலகில் மனிதர்களின் உள்ளங்கள் வரவரத் தாழ்வடைந்து வந்தாலும், அவர்கள் உருவாக்கும் கோபுரங்களின் உயரங்கள் விண்ணைத் தொடுமளவுக்கு உயர்ந்து உயர்ந்து வருகின்றன. உதாரணத்துக்கு இதோ சில:

- சவூதி அரேபியாவில் 'ஜெட்டா கோபுரம்' (Jeddah Tower) என்ற பெயரிலான உலகிலேயே மிக உயரமான கோபுரத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 3,280 அடி உயரமான (ஒரு மைல் 5,280 அடி நீளமானது என்ற வகையில் இதன் உயரம் அரை மைலுக்கும் கூடுதலானது) இந்தக் கோபுரத்தின் திறப்பு விழா 2021இல் நடைபெறவுள்ளது.
- மலேசியாவில் 'கேஎல் 118 கோபுரம்' (KL 118 Tower) என்ற 2,113 அடி உயரமான கோபுரத்தின் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன. திறப்பு விழா 2019இல் நடைபெறவுள்ளது.
- இந்தோனேசியாவில் 'கையெழுத்து கோபுரம்' (Signature Tower) என்ற 2,093 அடி உயரமான கோபுரம் கட்டப்பட்டு வருகின்றது. இதன் திறப்பு விழா 2021இல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.
- சீனாவில் 'வூகான் பசுமைத்தரை நிலையம்' (Wuhan Greenland Center) என்ற பெயரில் அமைக்கப்பட்டு வரும் 2,087 அடி உயரக் கோபுரம் 2018இல் திறந்து வைக்கப்படவுள்ளது.
- சீனாவில் மேலுமொரு உயர்ந்த கோபுரம் அமைக்கப்பட்டு வருகின்றது. 'பிங் அன் நிதி நிலையம்' (Ping An Finnance Center) என்ற பெயரிலான 1,969 அடி உயரமான இந்தக் கோபுரத்தின் திறப்பு விழா 2017இல் நடைபெறவுள்ளது.

# மழை

ஆலி - துளி, துளியா மழை விழும்.

சோனை - விடாமல் பெய்யும் மழை.

தூறல் - சின்ன, சின்ன மழைத்துளிகள்.

சாரல் - மலையில் பட்டு விழும் மழை.

அடைமழை - நாள் முழுக்க பெய்யும் மழை.

கனமழை - அளவில் பெரிய துளிகள் உள்ள மழை.

மாரி - கனமழையைவிட வேகமானது.

ஆலங்கட்டி மழை - கட்டிக்கட்டியாக மழையுடனோ அல்லது தனியாகவோ பனிக்கட்டி விழுந்தால், அது ஆலங்கட்டி மழை.

பனிமழை - பனியானது மழையாகப் பொழிவது. இந்த வகையான மழை இமயமலை போன்ற சிகரங்களில் பெய்யும்.

ஆழிமழை - கடலில் பொழியும் இடைவிடாத மழையைக் குறிக்கும்.

புயல்மழை - புயல் என்பது காற்றுடன் வரும் மழையைக் குறிக்கும்.

# முடியாது!!! முடியாது!!! முடியவே முடியாது!!!!

பாம்பால் கேட்க இயலாது.

கிவி பறவையால் பறக்க இயலாது.

குதிரையால் படுத்து உறங்க இயலாது.

நாயால் நிறங்களை கண்டறிய முடியாது.

யானையால் குதிக்க முடியாது.

நிலத்தடி எறும்புகளால் பார்க்க முடியாது.

ஒட்டகத்தால் ஒலி எழுப்ப முடியாது.

வவ்வாலால் பார்க்க முடியாது.

# குரக்கன் எனும் கேழ்வரகு

இலங்கைத் தமிழர்களால் குரக்கன் என்றும், தமிழகத் தமிழர்களால் கேழ்வரகு என்றும் அழைக்கப்படும் சிறுதானியம் ஆபிரிக்காவிலிருந்தே இந்திய ஒப கண்டத்தில் அறிமுகமானது எனத் தெரிய வருகிறது.

இந்தக் குரக்கன் தமிழகத்தைப் பொறுத்தவரையில் ஏழை எளிய கிராமப்புற மக்களின் மிக முக்கியமான உணவாகும். அங்கே அவர்கள் அதை கூழாகவும், கழியாகவும், கஞ்சியாகவுமே கூடுதலாகப் பயன்படுத்துகின்றனர்.

இலங்கையின் வட பகுதியில் முன்னொரு காலத்தில் ஒவ்வொரு விவசாயியும் தவறாமல் குரக்கன் செய்கையில் ஈடுபட்டு வந்தான். அவனது தினசரி உணவில் சோற்றுடன் சரிபாதி கீரை போட்டு அவித்த குரக்கன் பிட்டு இருக்கும். இதுதவிர, கழியாகவும் கிளறி உண்பார்கள். ஆனால் நவீன உணவுப் பழக்கம் குரக்கனை அடியோடு மறக்க வைத்துவிட்டது. நீரிழிவு வியாதிக்கு குரக்கன் உணவு சிறந்தது என்பதால், அவ்வியாதி உள்ளவர்கள் மட்டும் சில வேளைகளில் அதைத் தேடி உண்கின்றனர்.

குரக்கனின் மறு பெயர்களாக கேழ்வரகு என்பது மட்டுமின்றி, தமிழகத்தில் ஆரியம், கேவுரு, கேப்பை, ராகி என்ற பெயர்களும் நிலவுகின்றன.

# விக்கிபீடியா 15 வருடம்

2000ஆம் ஆண்டில் ஜிம்மி வேல்ஸ் (Jimmy wales) என்பவரும் அவரது சகபாடிகள் சிலரும் இணைந்து Nupedia எனும் இணைய அடிப்படையான கலைக்களஞ்சியமொன்றை ஆரம்பித்தனர். இதில், தகைமை வாய்ந்தவர்களிடமிருந்தே ஆக்கங்கள் பெறப்பட்டு வெளியிடப்பட்டன. இதனால் Jimmy wales எண்ணியது போல Nupedia வின் வளர்ச்சி அமையவில்லை. இதனால் அவர் தனது சகபாடிகளுடன் இணைந்து Encyclopedia வளர்ச்சியடைய செய்ய என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென தீவிரமாக ஆலோசித்தனர். அதன்போதே Wiki engines தொடர்பான எண்ணக்கருவினை அறிந்து அதன்படி Nupedia ஐ Wiki வகையான கலைக்களஞ்சியமாக மாற்றத் தீர்மானித்தனர். 2001ம் ஆண்டு ஜனவரி மாதம் 15ம் திகதி Nupedia வானது Wikipedia (http://en.wikipedia.org) என பெயர்மாற்றப்பட்டு இணையத்திற்கு வந்தது. அன்று முதல் தகவல்களின் திரட்டுகை ஆரம்பமாயிற்று. அதனால் ஒவ்வொரு வருடமும் ஜனவரி 15ம் திகதியை விக்கிபீடியா தினம் (Wikipedia day) என எல்லோரும் நினைவுபடுத்திக் கொண்டாடி வருகிறார்கள்.

தமிழ் மொழியிலமைந்த கட்டற்ற கலைக்களஞ்சியம் தமிழ் விக்கிப்பீடியா (http://ta.wikipedia.org) முயற்சி 2003 இல் ஆரம்பிக்கப்பட்டது.

# மாவோவுக்கு சிலை

சீனாவின் தந்தை மாவோவுக்கு ஹெனான் மாகாணத்தில் தங்க முலாம் பூசப்பட்ட மிகப் பிரம்மாண்டமான சிலை உருவாகி வருகிறது. மாவோ மீது மிகுந்த அன்பு வைத்திருக்கும் தொழில்முனைவோர்களும் கிராம மக்களும் சேர்ந்து 3.25 கோடி ரூபாய் நிதி திரட்டி இந்தச் சிலையை உருவாக்கி வருகிறார்கள். தலைப் பகுதி மட்டும் இரண்டு மாடி உயரங்களுக்குப் பெரிதாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. 121 அடி உயரம் கொண்ட இந்தச் சிலையை 9 மாதங்களாக உருவாக்கி வருகிறார்கள். 1949 இல் சீனாவில் ஏற்பட்ட ஆயுதப் புரட்சிக்குப் பிறகு மாவோ தலைமையில் கம்யூனிஸ்ட் ஆட்சி மலர்ந்தது. இறந்து 40 ஆண்டுகளுக்குப் பிறகும் சீன மக்களிடத்தில் அதிக மதிப்பும் செல்வாக்கும் மிக்கத் தலைவராக இருக்கிறார் மாவோ.

# நோர்வேக்கு மீண்டும் செங்கம்பள வரவேற்பு!



"போன மச்சான் திரும்பி வந்தான் திரும்பி வந்தான் பூ மணத்தோடை" என்பது ஒரு தமிழ் சிலேடைத் தொடர். அது இப்போது நோர்வே நாட்டுக்கும் பொருந்தும் போல இருக்கின்றது.

இலங்கை இனப்பிரச்சினையில், குறிப்பாக அரசாங்கத்தும் புலிகளுக்கும் இடையில் சமாதானத் தரகு முயற்சிகளில் நோர்வேக்கும், அது நியமித்த 'விசேட சமாதானத் தூதர்' எரிக் சோல்கெய்ம்முக்கும் இருந்த ஈடுபாடு உலகப் பிரசித்தமானது. (இஸ்ரேல் - பாலஸ்தீன தரப்புகளுக்கிடையே நோர்வே சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு தோல்வியில் முடிந்த சம்பவம் இன்னொரு பிரசித்தமான வரலாறு)

சந்திரிக குமாரதுங்க ஆட்சிக்காலத்தில்தான், அவரால் இலங்கை இனப்பிரச்சினை தீர்வு முயற்சிகளில் நோர்வே உள் நுழைக்கப்பட்டது. பின்னர் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியான பின்னரும் கூட நோர்வேயின் முயற்சி சில காலம் தொடர்ந்தது. ஆனால் ஒரு கட்டத்தில் நோர்வேயின் சமாதான முயற்சிகளில் சந்தேகப்பட்டோ (புலிகளுக்குச் சாதகமாகச் செயற்படுகிறது என), அல்லது நம்பிக்கை இழந்தோ, மகிந்த நோர்வேயை ஓரம்கட்டிவிட்டு, யுத்தத்தை உறுதியுடன் முன்னெடுத்து, புலிகளை அழித்து போரை முடிவுக்குக் கொண்டு வந்தார். நோர்வேயின் சமாதான முயற்சிகள் தொடர்ந்திருந்தால், புலிகள் அழிக்கப்படவோ, யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்படவோ இன்றுவரை முடிந்திருக்காது என்பது பலரின் அபிப்பிராயம்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளின் மீது இலங்கையர்கள் பலர் சந்தேகப்பட்டதற்கு பல காரணங்கள் இருந்தன. முக்கியமான காரணம், புலிகளை ஒரு பயங்கரவாத அமைப்பாக அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, அவுஸ்திரேலியா, ஐரோப்பிய யூனியன் உட்படப் பல நாடுகள் தடை செய்திருந்த போதிலும், நோர்வே இன்றுவரை அவ்வாறு செய்யவில்லை. இன்றும் புலிகளின் பல முக்கிய பிரமுகர்களின் சரணாலயமாக நோர்வேதான் இருக்கின்றது.

போர் முடிவுற்ற பின்னர், நோர்வேயின் பக்கச்சார்பு குறித்து முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நோர்வே மீது பகிரங்கமாகவே குற்றச்சாட்டு சுமத்தியதும், அதற்கு எரிக் சோல்கெய்ம் பதிலளித்ததும் எல்லோரும் அறிந்த விடயம். அதைவிட, அண்மையில் லண்டனில் ஒரு நிகழ்வில் பேசிய எரிக் சோல்கெய்ம், "தமிழரின் உரிமைகளை சிங்களவர்கள் அன்பளிப்பாகத் தரமாட்டார்கள், போராடியே பெற வேண்டும்" எனக் கருத்துத் தெரிவித்ததாக. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை 2015 ஒக்ரோபர் 15இல் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது. அவர் அவ்வாறு பேசியிருந்தால், அது மிகவும் பாரதூரமான விடயமாகும். ஏனெனில், அக்கருத்தின் பொருள், புலிகள் தமிழர்களின் உரிமைகளைப் பெற ஆயுதம் ஏந்திப் போரிட்டது சரி என்பதாகும்.

இலங்கையில் 2015 ஜனவரி 8இல் மைத்திரிபால சிறிசேன தலைமையில் மேற்கத்தைய சார்பு அரசாங்கம் ஏற்பட்ட பின்னர், இலங்கையில் மீண்டும் சமாதான முயற்சிகளைத் தொடரும் தனது அவாவை சோல்கெய்ம் வெளிப்படுத்தினார். அதிலிருந்து நோர்வேஜியர்களுக்கு இலங்கை மீது உள்ள அபரிமிதமான ஈடுபாட்டைப் புரிந்து கொள்ள முடியும்.

இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான், தற்போதைய நோர்வே அரசாங்கத்தின் வெளிவிவகார அமைச்சர் போர்ஜ் பிரெண்ட் இலங்கைக்கு விஜயம் ஒன்றை அண்மையில் மேற்கொண்டிருந்தார். அவருக்கு இலங்கை அரசாங்கம் செங்கம்பள வரவேற்பு அளித்து மிகக் கௌரவமாக வரவேற்றுள்ளது. (வழமையாக அரச தலைவர்களுக்குத்தான் செங்கம்பள வரவேற்பு அளிப்பது வழமை) கொழும்பில் ஊடகவியலாளர்களிடம் பேசிய நோர்வே வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் மைத்திரி – ரணில் அரசின் நடவடிக்கைகளைப் பெரிதும் பாராட்டியுள்ளார்.

பொதுவாக இலங்கை மீது மேற்கு நாடுகள் அதீத அக்கறை கொள்வதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் உள்ளன. ஒன்று, இலங்கையின் மிகவும் செழிப்பான இயற்கை வளங்களாகும். 400 வருட காலனித்துவ ஆட்சியில் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரித்தானியர் என, இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி புரிந்த மேற்கு ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையின் வளங்களைச் சுரண்டி சூறையாடி ருசி

கண்டிருக்கிறார்கள். அந்த ஆசை இன்றுவரை தொடர்கிறது என்றுதான் எண்ணத் தோன்றுகிறது.

இரண்டாவது காரணம், உலகப் போக்குவரத்தின் கேந்திரமானதொரு அமைவிடத்தில் இலங்கை அமைந்திருப்பது. அதனால்தான், சீனாவுடன் பல்வேறு துறைகளில் போட்டியில் ஈடுபட்டிருக்கும் அமெரிக்காவும், இந்தியாவும், அவர்களது கூட்டாளி நாடுகளும், முன்னைய மகிந்தவின் அரசு சீனாவுடன் நெருங்கிச் செல்வதை விரும்பாமல், அவருடைய அரசில் பிளவை ஏற்படுத்தி, இறுதியில் அவரைப் பதவியில் இருந்தும் அகற்றி, தமக்குச் சாதகமான தற்போதைய அரசைப் பதவிக்குக் கொண்டு வந்தன.

நோர்வேயைப் பொறுத்தவரையில், இலங்கையின் கேந்திர முக்கியத்துவம் என்ற விடயத்தை விட, அதன் அபரிமிதமான கடல் வளங்களிலேயே கண் வைத்துள்ளது. இலங்கையில் போர் ஆரம்பமாவதற்கு முன்னர், நோர்வே இலங்கையில் கடல்வளத்துறை சார்ந்த பல முயற்சிகளில் பெரும் முதலீடுகளைச் செய்திருந்தது. குறிப்பாக, வட பகுதிக் கடலில் மீன், இறால், நண்டு, கடல் அட்டை, சங்கு, சிப்பி என்பன அதிகமாக இருந்ததால், அங்கு நோர்வே பல தொழில்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வந்தது. காரைநகரில் அமைந்திருந்த வள்ளங்கள், வலைகள் தயாரிக்கும் நோர்வே முதலீட்டுடனான சீ நோர் நிறுவனமும், நாவற்குழியில் அமைந்திருந்த இறால் பதனிடும் அன்றூாஸ் நிறுவனமும் அவற்றில் குறிப்பிடத்தக்கவை.

நோர்வேயின் இலங்கை மீதான பொருளாதார ஈடுபாட்டை அண்மையில் அங்கு சென்ற அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சரும் உறுதிப்படுத்தவிட்டுச் சென்றிருக்கிறார். அவர் அங்கு ஊடகவியலாளர்களிடம் பேசுகையில், "இலங்கை தற்போது மிக முக்கியமான மறுசீரமைப்புகளை மேற்கொண்டு வருகிறது. இலங்கையின் அபிவிருத்திகளை முன்னெடுத்துச் செல்வதில் சர்வதேச சமூகம் உங்களது அரசுடன் வலுவான ஒத்துழைப்புகளை ஏற்படுத்திக் கொள்வதில் ஆர்வமாக இருக்கின்றது. **இலங்கையுடனான நோர்வேயின் ஒத்துழைப்பைப் பொறுத்த வரையில், மீன்பிடித்துறையில் மீட்சி பெறுவதையும், அதன்பின்னர் நீரியல் வளங்கள் அபிவிருத்தியையுமே அவர்கள் எதிர்பார்க்கிறனர்".**

இங்கு அவர் இலங்கை மிக முக்கியமான மறுசீரமைப்புகளை என்று குறிப்பிடுவது, இதுவரை காலமும் இருந்து வந்த இலங்கையின் ஓரளவு சுயாதீனமான அரசியல், பொருளாதார நிலையை தற்போதைய வலதுசாரி அரசாங்கம் மேற்குலகு சார்பாக மாற்றுவதற்கு எடுத்துள்ள முயற்சிகளையும், 'சர்வதேச சமூகம்' என அவர் குறிப்பிடுவது மேற்கத்தைய நாடுகளையே என்பதையும், ஒருவர் விளங்கிக் கொள்வதற்கு விசேடமான பாண்டித்தியம் எதுவும் தேவையில்லை.

**- குரு**

---

7ம் பக்கத்தொடர்ச்சி...

எதிர்ப்பதாக நீண்ட காலமாகச் சொல்லி வரும் ஜே.வி.பி., எதற்காக அந்தச் சக்திகளால் களமிறக்கப்பட்ட ஜனாதிபதி வேட்பாளரை ஆதரித்தது? மகிந்த ராஜபக்சவை ஆதரிக்க விரும்பாவிட்டாலும், ஜனாதிபதித் தேர்தலில் சுயாதீனமான ஒரு நிலைப்பாட்டை எடுத்திருக்கலாம்தானே?

மைத்திரி – ரணில் கூட்டணி மக்கள் விரோதப் பிற்போக்குக் கூட்டணி என்று தெரிந்து கொண்டு அந்த அரசைப் பதவிக்குக் கொண்டு வந்துவிட்டு, அந்த அரசின் ஓராண்டு பூர்த்தியின் போது இந்த அரசு மக்களுக்கு எதிராகச் செயற்படுகிறது என்று ஜே.வி.பி. ஆர்ப்பாட்டம் செய்வது, 'நம்பி ஏமாந்துவிட்டோம்' என்று காட்டுவதற்காகவா அல்லது மக்களை ஏமாற்றுவதற்காகவா?

யாழ்ப்பாணத்தில் றோ அரசியல் ஸ்திரமற்ற தன்மையை உருவாக்குகிறது என்றால், அது ஒரு பாரிய தேசியப் பிரச்சினை. அந்த விடயத்தை அரசாங்கத்தினதும், நாட்டு நலனில் அக்கறையுள்ள சக்திகளினதும் கவனத்துக்குக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுக்க வைப்பது ஜே.வி.பியின் கடமையல்லவா? ஜே.வி.பி. அதைச் செய்திருக்கிறதா?

இந்த விவகாரத்தில் வெறும் பூச்சாண்டி காட்டாமல், பொதுமக்களுக்கு றோ என்ன வகையாக யாழ்ப்பாணத்தில் செயல்படுகிறது என்று தெளிவாக்க வேண்டிய கடப்பாடு ஜே.வி.பிக்கு முன்னால் உள்ளது. அதை அவர்கள் தட்டிக்கழித்துவிட முடியாது.
*

---

ஆரம்பத்தில் மிகச்சிக்கலான அமைப்பில் பூமியில் உயிர்கள் தோற்றம் பெற்றன. அவை தமக்கு மத்தியில் எப்போதும் வாழ்தலுக்கான போட்டியில் ஈடுபட்டிருந்ததால் சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப தம்மை மாற்றிக்கொள்ளவேண்டிய தேவை அவற்றுக்கு இருந்தன. அவ்வாறு மாற்றிக்கொள்ள முடியுமானவை பிழைத்தன. இயலாதவை அழிந்து போயின. இவ்வாறு கடும் போட்டியில் தனது இருப்பை பாதுகாத்துக் கொள்ள முடியுமாக இருந்த உயிர்களை, இயற்கை தேர்வின் மூலம் தெரிவுசெய்யப்பட்ட உயிர்கள் எனக் கூறலாம். இவ்வாறு மில்லியன் கணக்கான ஆண்டுகள் இடம் பெற்று வருவதால் உயிர்கள் இன்றுள்ள சிக்கலான அமைப்பை பெற்றன. காலப்போக்கில் வித்தியாசமான சூழல் காரணிகளுக்கு ஏற்ப வித்தியாசமான உயிர்களாகவும் அவை பரிணாமம் அடைந்தன. பெற்றோரின் மரபியற் குணங்கள் பிள்ளைகளிடம் அல்லது அவர்களது வழித்தோன்றல்களிடம் இருப்பது பாலில் நீர் கலந்திருப்பது போன்றதாகும். அது மட்டுமல்லாமல் இந்த அண்டத்தில் வாழும் பல்வகைப்பட்ட உயிரினங்களுக்குள், வேற்றுமைகளுக்கிடையில் பல ஒற்றுமைகளும் உள்ளன.

**-சார்ள்ஸ் டார்வின் (1809-1892)**

பார்வைகள்: **தமிழ் இந்து** (இந்தியா)

# பாரிஸ் மாநாடு: வெற்றி யாருக்கு?

**-ஆதி வள்ளியப்பன்**

**தங்களின் பொறுப்புகளிலிருந்து சாமர்த்தியமாக விலகியிருக்கின்றன பணக்கார நாடுகள்**

'வரலாற்றுத் திருப்புமுனை ஒப்பந்தம்" - பல்வேறு இந்திய நாளிதழ்களின் ஞாயிற்றுக்கிழமை தலைப்புச் செய்தி இப்படித்தான் இருந்தது.

பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னர் பாரிஸில் நடைபெற்ற சர்வதேச பருவநிலை மாற்ற உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட புதிய ஒப்பந்தம், உலகை அச்சுறுத்தும் பருவநிலை மாற்றம் ஏற்படுத்த உள்ள தாக்கங்களுக்குத் தீர்வு காண உதவும் என்றே இந்திய ஊடகங்கள் பலவும் நம்புகின்றன.

2009-ல் கோபன்ஹேகனில் நடைபெற்ற உச்சி மாநாட்டில் ஆக்கப்பூர்வமான ஒப்பந்தம் எதுவும் எட்டப்படாத நிலையில், சமீபத்திய ஒப்பந்தம் புதிய பசுமைப் பாதைக்கு வழிகோலியுள்ளதாக பத்திரிகைகள் பாராட்டுகின்றன. ஆனால், பாரிஸ் ஒப்பந்தம் முழுக்க முழுக்க சமரசத்துக்கு உள்ளான, மிகச் சாதாரணமான கூறுகளைக்கொண்ட ஒப்பந்தம் என்பதுதான் பருவநிலை மாற்றப் பேச்சுவார்த்தைகளின் வரலாற்றை அவதானித்துவரும் சுற்றுச்சூழல் அறிஞர்களின் கருத்து.

## காரணங்கள் என்ன?

குளிர்சாதனப் பெட்டிகளில் பயன்படுத்தப்பட்ட 'குளோரோ ஃபுளூரோ கார்பன்' ஒசோன் படலத்தை அரித்துத் தின்பதால் சர்வதேசத் தடை, விஷத்தன்மை கொண்டுள்ளதால் 'எண்டோஃசல்பான்' பூச்சிக்கொல்லிக்கு படிப்படியான தடை என்பன போன்ற சர்வதேச ஒப்பந்தங்கள் உலக நாடுகளால் ஏற்கெனவே ஏற்றுக்கொள்ளப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தையும் தாண்டி, ஒட்டுமொத்த சுற்றுச்சூழல் சீரழிவுக்கு வழிவகுக்கும் கார்பன் டைஆக்சைடு உள்ளிட்ட பசுங்குடில் வாயுக்களை (Greenhouse Gases) கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் சமீபத்திய பாரிஸ் உச்சி மாநாடு கூடியது.

ஆனால், இந்த மாநாட்டின் நோக்கம் நிறைவேறவில்லை என்று சுட்டிக்காட்டுகிறது புதுடெல்லியைச் சேர்ந்த அறிவியல், சுற்றுச்சூழல் மையம். "பசுங்குடில் வாயு வெளியீட்டை பணக்கார நாடுகள் கட்டுப்படுத்துவதற்கு வலியுறுத்தும் எந்த அர்த்தபூர்வமான இலக்குகளும் இந்த ஒப்பந்தத்தில் இல்லை. சுற்றுச்சூழல் சமஉரிமையை நிலைநாட்டுவது பற்றியோ, உலகைக் காப்பாற்றத் தேவையான கார்பன் பட்ஜெட் பற்றியோ ஒப்பந்தத்தில் உருப்படியாக எதுவுமில்லை. பருவநிலை மாற்ற பேதத்தை இது இன்னமும் மோசமடையவே செய்யும்" என்கிறார் இந்த மையத்தின் தலைமை இயக்குநர் சுனிதா நாராயண்.

பாரிஸ் ஒப்பந்தப்படி பார்த்தால் தற்போது உள்ளதைவிட உலகின் சராசரி வெப்பநிலை 3 டிகிரி செல்சியஸும், அதற்கு மேலும் அதிகரிக்கும். இப்படி புவி வெப்பமடைவதைக் கட்டுப்படுத்தும் வகையில் 2020-ம் ஆண்டுக்கு முன்னதாக குறிப்பிடத்தக்க அளவு நிதியுதவி செய்வதாகவோ, பசுங்குடில் வாயுக்களின் வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்துவதாகவோ பணக்கார நாடுகள் ஒப்புக்கொள்ளவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரை இந்த ஒப்பந்தத்தில் சரியான வார்த்தைகளைப் புகுத்துவதில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது. அதேநேரம் சுற்றுச்சூழல் சமஉரிமையை நிலைநாட்டுவதற்கான நடைமுறைகளையோ, அதிகப்படியாக பசுங்குடில் வாயுக்களை வெளியிடுவதற்கான சலுகையோ இந்தியாவுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது என்று இம்மையம் சுட்டிக்காட்டுகிறது.

## தப்பித்த பணக்கார நாடுகள்

பருவநிலை மாற்றம் உருவாகக் காரணமாக இருந்த பசுங்குடில் வாயுக்களை வெளியிட்டதில் பணக்கார நாடுகளுக்கு வரலாற்றுரீதியில் பொறுப்புடைமை இருக்கிறது. பணக்கார நாடுகளின் அதாவது அமெரிக்க, ஐரோப்பா உள்ளிட்ட நாடுகள், தொழிற்புரட்சி காலத்தில் இருந்தே புவி வெப்பமடைவதற்குக் காரணமாக இருக்கும் பசுங்குடில் வாயுக்களை வெளியிட்டு வந்துள்ளன.

அதன் காரணமாக தங்களுடைய கடந்த கால செயல்பாட்டுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு, பருவநிலை மாற்றத்தைத் தள்ளிப்போடுவதற்கு ஏழை நாடுகளுக்கு நிதியுதவியையும், தொழில்நுட்ப உதவியையும் அவை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. வரலாற்றுச் சிறப்புமிக்க கியோட்டோ பருவநிலை மாற்ற ஒப்பந்தத்தில் (1997) "வரலாற்றுப் பொறுப்புடைமை" (historical responsibility) என்ற வார்த்தை இந்த அடிப்படையில்தான் இடம்பெற்றது.

பணக்கார நாடுகள் பசுங்குடில் வாயுக்களின் வெளியீட்டைக் குறைக்க வேண்டும் என்று கட்டுப்பாடுகளும் அந்த ஒப்பந்தத்தில் விதிக்கப்பட்டன. அதன் காரணமாக அமெரிக்காவும் ஆஸ்திரேலியாவும் கியோட்டோ ஒப்பந்தத்தையே நீண்ட காலத்துக்கு ஏற்காமல் இருந்தன. பராக் ஒபாமா பதவியேற்ற பிறகும்கூட பசுங்குடில் வாயு வெளியீட்டைக் குறைப்பதற்கு அமெரிக்கா உடனடியாக முன்வரவில்லை.

பெரும்பாலான அமெரிக்கர்கள் ஒவ்வொரு நாளும் வேலைக்குச் செல்வதற்காகவே 100-200 கிலோ மீட்டர் சொந்தக் கார்களில் பயணிக்கிறார்கள். ஒவ்வொரு அமெரிக்கரும் பல்வேறு வழிகளில் கணக்கு வழக்கின்றி பசுங்குடில் வாயுக்களை நாள்தோறும் வெளியிட்டுக்கொண்டே இருக்கிறார்கள். உலகம் அழிவின் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்று தெரிந்த பின்னரும், அவர்களுடைய

வாழ்க்கை முறையில் பெரிய மாற்றங்கள் நிகழவில்லை.

ஐரோப்பியர்கள் தலையிலும் வரலாற்றுரீதியிலான பசுங்குடில் வாயு வெளியீட்டு சுமை இருக்கிறது. அதேசமயம், சிறிய அளவிலாவது மாற்றத்தை ஏற்றுக்கொள்ள ஐரோப்பியர்கள் தயாராக உள்ளனர். ஆனால் சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் பசுங்குடில் வாயு வெளியீடு அதிகரித்துவருகிறது என்ற பூச்சாண்டியைக் காட்டி, அதன் நிழலில் ஒதுங்கிக்கொள்ள அமெரிக்கா முயற்சித்தது.

## வரலாற்று நழுவல்

பாரிஸ் ஒப்பந்தத்தில் "வரலாற்றுப் பொறுப்புடைமை" என்ற வார்த்தை நீக்கப்பட்டிருப்பதன்மூலம், விரைவாக உலகைக் காப்பாற்றும் முயற்சியில் இருந்து அமெரிக்கா உள்ளிட்ட பணக்கார நாடுகள் விலகி ஓடியுள்ளதாகவே சொல்ல வேண்டும். இவ்வளவு காலமும் அந்த வார்த்தையை நீக்குவதற்காகத்தான் அந்த நாடுகள் நேரடியாகவும், கார்பரேட் ஆதரவு விஞ்ஞானிகள், பிரதிநிதிகள் மூலமாகவும் பேச்சுவார்த்தைகளுக்கு முட்டுக்கட்டை போடுவது, திசைதிருப்புவது போன்ற செயல்பாடுகளில் ஈடுபட்டு வந்தன. பாரிஸ் மாநாட்டில் தங்கள் நோக்கத்தை அவை எட்டிவிட்டன.

"வரலாற்றுப் பொறுப்புடைமையில் இருந்து பணக்கார நாடுகள் விடுபட்டுள்ள நிலையில், அந்த நாடுகளுக்கும் ஏழை நாடுகளுக்கும் இடையிலான சுற்றுச்சூழல் சமஉரிமை சீர்குலைந்து, இடைவெளி மேலும் அதிகமாகும். பருவநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதில் பணக்கார-ஏழை நாடுகளுக்கு இடையே நிதர்சனமாக இருக்கும் வேறுபாடுகள், புதிய ஒப்பந்தத்தில் அழிக்கப்பட்டுவிட்டன" என்று விமர்சிக்கிறார் அறிவியல், சுற்றுச்சூழல் மையத்தின் துணைத் தலைமை இயக்குநர் சந்திர பூஷண்.

## அழிவுக்கு வரவேற்பு?

இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகள் இப்போதுதான் வளர்ந்து வருகின்றன. இந்த நிலையில் பசுங்குடில் வாயுக்களை வெளியிடுவதை வளரும் நாடுகளும் ஏழை நாடுகளும் விரைவாகக் கட்டுப்படுத்த வேண்டுமென வலியுறுத்த ஆரம்பித்தால், அது எப்படி நியாயமாகும்? பணக்கார நாடுகள் முழு வளர்ச்சியை எட்டிவிட்டு, இந்தியா போன்ற நாடுகள் மட்டும் நெருக்கடிக்கு இடையிலான வளர்ச்சியை மேற்கொள்ளச் சொல்வது எப்படிச் சரியாகும்?

எடுத்துக்காட்டாக இந்தியாவில் மக்கள்தொகை அதிகம். ஆனால், நாம் வெளியிடும் பசுங்குடில் வாயுவின் ஒட்டுமொத்த அளவு குறைவு. இதற்குக் காரணம் அடிப்படை வசதியில்லாமல் வறுமைக்கோட்டுக்குக் கீழ் இருப்பவர்களும், சாதாரண மக்களும் கோடிக் கணக்கில் வாழ்வதுதான். வரலாற்றுப் பொறுப்புடைமையில் இருந்து பணக்கார நாடுகள் தப்பிவிட்டதால், பசுங்குடில் வாயு வெளியீட்டைக் குறைப்பதற்கான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்போது, ஒவ்வொரு நாடும் இன்றைக்கு எவ்வளவு பசுங்குடில் வாயுக்களை வெளியிடுகிறதோ, அதன் அடிப்படையிலேயே கட்டுப்பாடுகளும் அமையும். நம் நாட்டில் ஒட்டுமொத்த பசுங்குடில் வாயு வெளியேற்றமும் அதிகரித்து வருகிறது.

ஆனால் மக்கள்தொகை அதிகம். அமெரிக்காவை எடுத்துக்கொண்டால் இது அப்படியே தலைகீழாகும். அப்படியிருக்கும்போது, மக்கள் தொகையைக் கணக்கில் எடுக்காமல், முன்வைக்கப்படும் கட்டுப்பாட்டை நாம் எப்படி ஏற்க முடியும்?

வழக்கம்போலவே, வார்த்தை ஜாலங்களும், போகாத ஊருக்கு வழி சொல்லும் வாக்குறுதிகளும்தான் இந்த பருவநிலை மாற்ற ஒப்பந்தத்திலும் நிரம்பியுள்ளன என்பதே சுற்றுச்சூழல் அறிஞர்கள் முன்வைக்கும் விமர்சனம். இனி என்னதான் செய்யப்போகிறது உலகம்?

4ம் பக்கத்தொடர்ச்சி...

அருமை பெருமையான புத்தகங்களும் அடங்கும். தோழர் கெனமனின் மறைவின் பின்னர் அவற்றை அவரது துணைவியார் யாழ்.நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தார்.

இதுதவிர, புலிகளுடன் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்திலேயே வட பகுதியில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்தினர் சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை யாழ்.நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்திருந்தனர். பின்னர் கொழும்பிலுள்ள இந்திய, சீனத் தூதரகங்களும் பல இலட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்களை அன்பளிப்புச் செய்தன. இந்தப் புத்தக அன்பளிப்புக்காக கொழும்பிலுள்ள சீனத் தூதுவர் தானே நேரடியாக யாழ்ப்பாணம் சென்று வைபவத்தில் கலந்து கொண்டார். வேறு பல நாடுகளிலிருந்தும் புத்தக நன்கொடைகள் கிடைத்திருக்கின்றன.

ஆனால் வழமைபோலவே, தமிழ் தேசியம் பேசுவோரிடமிருந்து இந்த நூலகத்துக்கு ஆக்கபூர்வமான உதவிகள் எதுவும் கிடைக்கவில்லை. பதிலுக்கு அவர்கள் செய்ததெல்லாம் அழிவு வேலைகள்தான். புதிய நூலகம் கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட பொழுது, புலிகள் அதைத் தடுத்து நிறுத்தினர். அதற்கான ஒரேயொரு காரணம், அப்பொழுது யாழ்.மாநகர முதல்வராக செல்லன் கந்தையன் என்ற தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர் இருந்ததும், அவர் தலைமையில் நடைபெறவிருந்த திறப்பு விழாவில் புலிகளைக் கர்ணகடூரமாக விமர்ச்சித்து வந்த தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி அதைத் திறந்து வைக்க இருந்ததும்தான்.

தற்பொழுது தென்னிலங்கை மக்களின் சார்பாக 10,000 புத்தகங்களைக் கையளித்த வைபவத்தில் உரையாற்றிய சிங்கள நாவலாசிரியர் உப்புல் சாந்த, ''யாழ்.நூலகத்ததை இனவாதிகளும், மதவாதிகளுமே எரியூட்டினர்'' என பிபிசியிடம் குறிப்பிட்டார். அதன் பாதிப்பை உணர்ந்த தம்மைப் போன்றோருக்கு அதைக் கட்டியெழுப்ப வேண்டும் என ஏற்பட்ட அவா காரணமாகவே இந்த புத்தக அன்பளிப்பு முயற்சி முன்னெடுக்கப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த நூல்களில் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் சேர்ந்த சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், கலை கலாச்சாரம், அறிவியல், சமூகவியல், சுயசரிதை, வரலாறு, சுற்றுச்சூழல் என்பன சார்ந்த நூல்கள் அடங்கியுள்ளன. *

முன்பக்கத்தொடர்ச்சி…

இந்தத் தமிழ் கட்சிகளைப் போலவே பெரு முதலாளித்துவ, நிலப்பிரபுத்துவ சக்திகளின் பிரதிநிதியாக இருந்த ஐக்கிய தேசியக் கட்சி டட்லி சேனநாயக்க தலைமையில் 1965இல் ஏழுகட்சி கூட்டரசாங்கம் அமைத்த போது, தீவிர சிங்கள இனவாதிகளான கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனநாயக்க போன்றவர்களுடன் இவர்களும் அந்த அரசில் சேர்ந்து கொண்டனர். இதன்மூலம் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி என்பன அரசியல் ரீதியாக ஒரே நிலைப்பாட்டை உடையன என்பது நிரூபிக்கப்பட்டது.

தமிழ் மக்களுக்கு இந்த இருகட்சிகளும் செய்த துரோகம் காரணமாக, இந்த இருகட்சிகளினதும் பெரும் தலைவர்களான ஜீ.ஜீ.பொன்னம்பலம், அ.அமிர்தலிங்கம், மு.சிவசிதம்பரம், ஈ.எம்.வி.நாகநாதன், மு.ஆலாலசுந்தரம் போன்றோரை 1970ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் மக்கள் தோற்கடித்தனர். தமக்கு நேர்ந்துள்ள அபாயத்தை உணர்ந்த இவ்விரு கட்சிகளினதும் தலைவர்கள், தமக்குள்ளான நாய்ச்சண்டையை நிறுத்தி, தாம் ஒற்றுமைப்பட்டுவிட்டோம் என்ற ஒரு தோற்றப்பாட்டை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்க புதிய யுக்திகளை வகுத்துச் செயற்பட ஆரம்பித்தனர்.

1976ல் வட்டுக்கோட்டையில் இவ்விரு கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு மாநாட்டை நடாத்தி, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற புதிய அமைப்பை உருவாக்கியதுடன், இனிமேல் தங்களது முடிந்த முடிபு தமிழ் மக்களுக்கு சுதந்திரத் தனித்தமிழ் ஈழம் ஒன்றை அமைப்பதுதான் எனவும் பிரகடனம் செய்தனர்.

ஆனால் இவ்விரு கட்சிகளும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற பெயரில் தமது வங்குரோத்து அரசியலை தமிழ் மக்கள் மத்தியில் ஈடேற்றுவதற்காக வட்டுக்கோட்டை மாநாட்டில் கிளப்பிய 'தமிழ் ஈழம்' என்ற கோசம் சுமார் 33 வருடங்களாக தமிழர் வாழ்வில் ஏற்படுத்திய பாரிய அழிவு விரைவில் ஈடுசெய்யப்பட முடியாத ஒரு சூழலில், புலிகள் 2009இல் அழிக்கப்பட்ட பின்னர் சர்வதேச ஏகாதிபத்திய சக்திகளினதும், ஐ.தே.கவினதும் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப வேலை செய்ய ஆரம்பித்தனர்.

அதன் ஒரு கட்டமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இலங்கையில் மகிந்த ராஜபக்ச தலைமையில் இருந்த ஏகாதிபத்திய விரோத அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் பிற்போக்கு சக்திகளுடன் இணைந்து வெற்றி கண்ட பின்னர், பழையபடி டி.எஸ்.சேனநாயக்க காலத்து தமிழ் காங்கிரசின் அரசியல் பாதைக்கும், 1965இல் தமிழரசு கட்சியும், தமிழ் காங்கிரசும் மேற்கொண்ட அரசியல் பாதைக்கும் திரும்ப முற்பட்டதின் விளைவே இப்பொழுது தமிழ் தேசியக் கூட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிளவுக்குக் காரணம். இது ஒரு வகையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தான் வெட்டிய குழியில் தான் விழுந்த கதை என்றும் சொல்லலாம்.

தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைமை தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளுக்குத் துரோகம் செய்து, தமது அரசியல் சகபாடியான ஐ.தே.க அரசுடன் ஒத்துழைப்பதிலேயே நாட்டமாக இருக்கின்றது. இது அவர்களே உருவாக்கிய தமிழர் தேசியம், தன்னாட்சி என்ற கொள்கைகளுக்கு முரணானது என்பதில் சந்தேகமில்லை. அவர்களது இந்த நிலைப்பாடு, தமிழ் தேசியத்தை, அதாவது தமிழர்களுக்கென்று தனிநாடு ஒன்று அமைய வேண்டும் என்ற கருத்தில் அழுந்தி நிற்பவர்களுக்கு உடன்பாடானது இல்லை. அத்தகைய சக்திகள் பல அணிகளாக இருக்கின்றனர். புலிகளின் மிச்ச சொச்சங்கள், கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி என பல வடிவங்களில் அவை இருக்கின்றன. ஆனால் இவர்களுக்கு மக்கள் செல்வாக்குப் பெற்ற தலைவர் ஒருவரின் தலைமைத்துவம் இதுவரை காலமும் இல்லாமல் இருந்து வந்தது.

மறுபக்கத்தில் வட மாகாணசபைத் தலைவராக இருக்கும் சி.வி.விக்னேஸ்வரன் தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் மாகாணசபைத் தேர்தலில் முன்னிறுத்தப்பட்டு, அதன் செல்வாக்கில் வெற்றி பெற்றிருந்தாலும், ஆரம்பத்திலிருந்தே கூட்டமைப்புத் தலைமையுடனும், புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளுடனும் – குறிப்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் முரண்பாடுகளைக் கொண்டிருந்தார்.

அவர் கூட்டமைப்புத் தலைமையை விடத் தான்தான் தமிழ் மக்களின் நலன்களில் கூடுதலான அக்கறை காட்டுபவர் என்ற ஒரு தோற்றப்பாட்டை வட பகுதித் தமிழ் மக்களிடம் உருவாக்கி வந்துள்ளார். அவரது இந்த நிலைப்பாட்டை கூட்டமைப்புத் தலைமை மீது அவநம்பிக்கை கொண்ட அதன் ஆதரவாளர்களும், புலி ஆதரவாளர்களும், புலம்பெயர் நாடுகளில் வசதியாக இருந்து கொண்டு 'சிங்கள அரசுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும்' என்று கறுவிக்கொண்டு திரியும் பேர்வழிகளும் ஆதரிக்க ஆரம்பித்தனர்.

போதாக்குறைக்கு கூட்டமைப்புத் தலைமையுடன் நீண்டகாலமாக முரண்பாடு கொண்டிருந்தவரும், கடந்த தேர்தலின் போது தோல்வியடைந்த பின்னர் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை எதிர்பார்த்து ஏமாந்தவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன், மற்றும் கூட்டமைப்பில் தமிழரசுக்கட்சியின் ஏகபோகத் தலைமையை விரும்பாத புளொட் தலைவர் த.சித்தார்த்தன் போன்றோரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் 'சர்வாதிகார' போக்கை எதிர்ப்பதற்காக விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவையை ஆதரிக்கும் நிலையை எடுத்தனர்.

தமிழ் மக்கள் பேரவை என்ற அமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரானதோ அல்லது அது ஒரு அரசியல் இயக்கமோ அல்ல என விக்னேஸ்வரன் அறிவித்திருக்கின்ற போதிலும், அது உண்மை அல்ல. அது நிச்சயமாக முழுக்க முழுக்க கூட்டமைப்புக்கு எதிரான ஒரு அரசியல் இயக்கம்தான். அந்த உண்மை இன்னும் சில நாட்களில் நிச்சயமாக வெளிப்படும்.

ஆனால் பலரும் எதிர்பார்ப்பது போல, தமிழ் மக்கள் பேரவை, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு மாற்றான இயக்கமாக – அதாவது கொள்கை அளவில் – இருக்குமா என்பது ஒரு முக்கியமான கேள்வி. ஏனெனில் தமிழ் மக்கள் பேரவையும் முன்னர் தமிழரசுக்கட்சி,

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ ஈழ விடுதலைப் புலிகள், தற்போதைய தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பன பின்பற்றிய அதே தமிழ் தேசியவாத (இனவாத) பாதையிலேயே பயணிக்க முற்படுகிறது. ஆனால் தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமை என்பது அமைப்பு ரீதியாக மட்டுமின்றி குணாம்ச ரீதியாகவும் மாற்றானதாக இருக்க வேண்டும்.

குணாம்ச வித்தியாசம் என்னும் போது, ஐக்கியப்பட்ட இலங்கைக்குள் தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளை வென்றெடுப்பதும், இலங்கையின் ஏனைய இனங்களுடன் சமாதான சகஜீவனத்துடன் வாழ்வதும், ஜனநாயக விழுமியங்களைப் பேணுவதும் எனச் சுருக்கமாக வரைவிலக்கணப்படுத்தலாம். யுத்தம் ஆரம்பாவதற்கு முன்னர் தமிழ் மக்களுக்கு அவ்வாறான ஒரு தலைமையை உருவாக்க இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, லங்கா சமசமாஜக்கட்சி போன்ற இடதுசாரிக் கட்சிகள் முயன்றன. தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் ஆரம்பமான பின்னர், சில முற்போக்கான இயக்கங்கள் அந்த முயற்சியில் இறங்கின. அதன்பின்னர் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி அந்த முயற்சியைக் கையில் எடுத்தது.

ஆனால், காலத்துக்காலம் மாற்றுத் தலைமையை உருவாக்க முற்பட்ட இடதுசாரி – ஜனநாயக சக்திகளை பிற்போக்குத் தமிழ்த் தலைமைகள் முறியடிக்க முயன்றதுடன், யுத்தம் ஆரம்பமான பின்னர் இந்த தமிழ் பிற்போக்கு சக்திகளின் ஏவல் நாயான பாசிசப் புலிகள் மூலம் மாற்று இயக்கங்களை அழித்தொழிப்பதிலும் வெற்றி கண்டன. ஈ.பி.டி.பி கட்சி மட்டும் இந்த அழிப்பு முயற்சிகளுக்கு முகம் கொடுத்து இன்றுவரை தமிழ் பிற்போக்குத் தலைமையின் ஒரு மாற்று சக்தியாக ஓரளவாவது தன்னைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், பிற்போக்குத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினராலும், பல்வேறு வகையான புலி ஆதரவுக் குழுக்களாலும், வட மாகாணசபை முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை தமிழ் மக்களுக்கான ஒரு மாற்றத் தலைமையாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை. எப்படி தமிழ் காங்கிரசை “துரோகி” என்று சொல்லிக்கொண்டு தமிழரசுக்கட்சி தமிழ் தலைமைப் பதவியை எடுத்ததோ, அதேபோல தமிழ் தேசியக் கூட்டமைப்பை (தமிழரசுக்கட்சியை) “துரோகி” என்று சொல்லிக்கொண்டு தமிழ் மக்கள் பேரவை வளர முற்படலாம். ஆனால் சாராம்சத்தில் இருவரினதும் அரசியல் ஒன்றுதான். ஒரு இருபது வருடம் கழித்து தமிழ் மக்கள் பேரவையைத் “துரோகி” என்று சொல்லிக்கொண்டு இன்னொரு தீவிரமான தமிழ் இனவாத இயக்கம் முன்னுக்கு வரலாம்.

ஆனால், ஒரேயொரு விடயத்தை மட்டும் இங்கு குறிப்பிடலாம். அதாவது, தமிழர் விடுதலைக் கூட்டணி உருவான பின்னர் தமிழர்கள் மத்தியில் ஒரு கட்சி அல்லது ஒரு இயக்கம்தான் இருக்கலாம் என்ற பாசிசக் கொள்கை, புலிகளின் அழிவின் பின்னர் அடிப்படை தகர்ந்து, தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கத்தின் பின்னர் உடைந்தேவிட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமிழ் மக்கள் பேரவையும் ‘ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்’தான் என்ற போதிலும், தனியொரு கட்சி என்ற பாசிச நிலையிலிருந்து, இருகட்சி முறைமை என்ற முதலாளித்துவ ஜனநாயக முறைமையை தமிழ் மக்கள் பேரவையின் உருவாக்கம் தோற்றுவித்துவிட்டது. இதுதான் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தமிழர்கள் மத்தியில் செய்த ஒரே சாதனையாக எதிர்காலத்தில் நினைவுகூரப்படக்கூடும்.

ஆனால் உண்மையில் தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமை வேண்டும் என்ற வரலாற்றுத் தேவை எழுந்துள்ளது. அந்தத் தலைமை இதுவரை காலமும் பாரம்பரிய அல்லது பாசிச ஆயுதப் போராட்டத் தலைமைகள் பின்பற்றிய வெறுமனே தமிழ் இனவாத அரசியல் பாதையிலிருந்து விடுபட்டு தமிழ் மக்களின் உண்மையான தேசிய ஜனநாயகப் போராட்டத்தை – அதாவது தமிழ் மக்களின் தேசிய உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் – முன்னெடுத்துச் செல்வதாக அமைய வேண்டும்.

அதற்கான கரு தமிழ் மக்கள் மத்தியிலேயே பல தசாப்தங்களாக அடைகாக்கப்பட்டு வருகின்றது. அதாவது, சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து இன்றுவரை, தமிழ் மக்களில் சுமார் மூன்றிலொரு பகுதியினர் தேர்தல்களில் தமிழ் பிற்போக்கு சக்திகளுக்கு எதிராக வாக்களித்து வந்துள்ளனர். ஒரு பரீட்சையில் ஒரு மாணவன் அதிசிறந்த புள்ளிகள் எடுத்துச் சித்தியடையாவிட்டாலும், உச்ச கட்டமான 100 புள்ளிகளில் மூன்றிலொரு (33) புள்ளிகளை எடுத்தாலும் அவன் சித்தியடைந்தவன் என எவ்வாறு கணிக்கப்படுவானோ, அது போன்றதுதான் இதுவும்.

எனவே அந்த அடிப்படைக் கருவைத் தொடர்ந்து பாதுகாத்துக்கொண்டு, அதை வளர்த்தெடுத்தால், நிச்சயமாகத் தமிழ் மக்களுக்கு ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்க முடியும். அதைச் செய்ய வேண்டியவர்கள் தேசிய ரீதியில் இன பேதங்களுக்கு அப்பால் செயற்படும் இடதுசாரிகளும், தமிழ் மக்கள் மத்தியில் செயற்படும் ஜனநாயக சக்திகளும்தான். அந்தச் சக்திகள் இதைக் கவனத்தில் கொள்ளுவது காலத்தின் தேவையாகும்.

# ஜீவானந்தம் மாஸ்ரர் காலமானார்!

யாழ்ப்பாணம் அரியாலை கலைமகள் வீதியில் வசித்தவரும், யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியரும் (Head Teacher), சமூக சேவையாளருமான செல்லர் பரமநாதன் ஜீவானந்தம் (ஜீவானந்தம் மாஸ்ரர்) 10.12.2015 அன்று காலமானார்.

ஜீவானந்தம் மாஸ்ரர் தமது ஒடுக்கபட்ட சமூகத்தின் மேம்பாட்டுக்காக, ‘திருவள்ளுவர் மகாசபை’ என்ற பெயரில் அமைப்பொன்றை நிறுவி நீண்டகாலமாகச் செயற்பட்டவராவார். அதன் மூலம் பல, குறிப்பாகத் தமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியில் பெரும் வளர்ச்சியை ஏற்படுத்தினார்.

எல்லோருடனும் மிகவும் அன்பாகப் பழகும் அவரது மறைவு அவரது குடும்பத்தினருக்கு மட்டுமின்றி, அவரது சேவையைப் பெற்று வந்த அனைத்து மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து தமிழனின் மண் குப்பைகளால் நாறுகிறது!


யாழ்ப்பாண நகரில் பல இடங்களில் வீசி எறியப்படும் குப்பைகளால் பாரிய தொற்று நோய் அபாயமும் சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக காணப்படுகின்றன. அவற்றுக்கான தீர்வுகள் எட்டப்படாமலே இருக்கின்றன.

வீடுகளில் சேரும் கழிவுப் பொருட்களை மாநகர சபை உரிய முறையில் அகற்றாத காரணத்தால், சிலர் தமது வீட்டு கழிவுகளை பைகளில் கட்டி வீதிகளில் வீசி எறிகின்றனர். தமது வீடு துப்பரவாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தம் வீட்டு கழிவுகளை மற்றவர்களின் வீடுகளுக்கு முன்பாக வீசி எறிகின்றனர். இதற்கு மாநகர சபை ஒழுங்காக குப்பை எடுக்க வருவதில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது.

அதாவது, மாநகர சபை குப்பைகளை கொட்டி வந்த கல்லுண்டாய் வெளியில் குப்பை கொட்டக்கூடாது என மல்லாகம் நீதவான் நீதிமன்றில் அப்பகுதி மக்களால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, அது தொடர்பான வழக்கு விசாரணைகள் நடைபெற்று வருவதனால், கல்லுண்டாய் வெளியில் குப்பைகளை கொட்ட வேண்டாம் என நீதிமன்றம் தடை விதித்துள்ளது. அதனால் குப்பைகளை கொட்ட இடமில்லை என மாநகர சபை கூறுகின்றது.

வீதிகளில் வீசி எறியப்படும் குப்பைகளால் தொற்று நோய் அபாயம், சுகாதார சீர்கேடுகள் மற்றும் துர்நாற்றத்தால் அசௌகரியங்கள் என்பன ஏற்படுகின்றன.

## யாழ்ப்பாணக்




தொடர்ந்து குப்பைகளை கொட்டுகின்றார்கள் என்று மாநகர சபைக்கு முறைப்பாடு செய்தால் அவ்விட்டத்தில் ''குப்பைகளை கொட்டாதீர்கள்'' என அறிவித்தல் பலகையை நாட்டி விட்டு செல்கின்றார்கள். அதன் பின்னரும் குப்பைகளை கொட்டுகின்றார்கள் என மாநகர சபையிடம் முறையிட்டால் இதற்கு மேலே தாம் என்ன செய்வது என மாநகர சபையினர் கைவிரிக்கின்றார்கள்.

அது தொடர்பில் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தால் கொட்டுகின்றவர்களை அடையாளம் காட்டுங்கள் தாம் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்போம் என கூறுகின்றார்கள். ''கொட்டுகின்றவர்களை அடையாளம் தெரியும் என்றால் நாமே அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம்'' என பாதிக்கப்பட்டவர்கள் கூறுகின்றார்கள்.

அத்துடன் மழையினை தொடர்ந்து டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளது. ஆனால் எம் வீட்டுக்கு அருகில் மற்றவர்களால் வீசப்படும் குப்பைக்குள் நீர் தேங்கி டெங்கு பரவாதா ? அதற்கு யார் மீது நடவடிக்கை எடுக்க போகின்றார்கள்

மழைகாலத்தில் இலையான்களின் பெருக்கம் அதிகளவில் காணப்படும். அந்த நிலையில் வீதிகளில் வீசப்படும் குப்பைகளில் இருந்து பெருகும் இலையான்களால் அருகில் உள்ள வீடுகளிலும் இலையான்களின் பெருக்கம் அதிகமாக காணப்படுகின்றது. இதனால் தொற்று நோய்கள் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

கடந்த வாரங்களில் பெய்த கடும் மழை காரணமாக தொற்று நோய்கள் பரவும் அபாயங்கள் உள்ளன குறிப்பாக வயிற்றோட்டம், வயிற்றுளைவு, செங்கமாரி, நெருப்புக்காய்ச்சல் போன்ற தொற்று நோய் அதிகளவில் பரவும் வாய்ப்புக்கள் உள்ளன.

வருட ஆரம்பத்தில் இருந்து இதுவரை 9 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வயிற்றுளைவினாலும், 5 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் வயிற்றோட்டத்தினாலும், 150 ற்றும் மேற்பட்டவர்கள் நெருப்புக் காய்ச்சலினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே இந்தப் பிரச்சினைக்கு யாழ்.மாநகர சபையை மட்டும் குறைகூறுவதில் பயனில்லை.மக்களும் தவறிழைக்கிறார்கள். குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டும் அவற்றில் போடாமல் தூக்கி வீசுகிறார்கள். அந்தக் குப்பைகள் வீதிகளில் சேருகின்றன. அவ்வாறு சேர்வதால் குறித்த பகுதிகளில் துர்நாற்றம் வீசுவதுடன் நோய்களும் ஏற்பட அதிக வாய்ப்புக்கள் உண்டு. எனவே இப்பிரச்சினைக்கு உரிய அதிகாரிகள் கவனத்திற் கொண்டு இதற்கு உடனடித் தீர்வை காண வேண்டும்.

முக்கியமாக, முன்னைய யாழ்.மாநகர சபை நிர்வாகத்தின் ஆயுட்காலம் முடிவடைந்த பின்னர், அதற்கான தேர்தலை உரிய நேரத்தில் நடாத்தாமல், அதிகாரிகளின் நிர்வாகத்தில் அதை விட்டிருப்பதால், ஆளுக்காள் பொறுப்பைத் தட்டிக் கழிக்கும் போக்கே காணப்படுகிறது.

அதுமட்டுமின்றி, மாநகரசபையின் பொறுப்பைத் தன்வசம் வைத்திருக்கும் வடக்கு மாகாணசபை, இந்த மாதிரியான மக்கள் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, தமிழ் மக்களை உணர்ச்சிமயப்படுத்தும் தீர்மானங்களை நிறைவேற்றுவதிலேயே தன் கவனத்தைச் செலுத்தி வருகிறது.

இந்த நிலைமையில், மக்கள் முன்யை காலங்களில் இருந்தது போல, வரியிறுப்பாளர்கள் சங்கங்களை உருவாக்கி களத்தில் இறங்கிப் போராடுவதைத் தவிர வேறு வழி இல்லை.

**–சிவா**